Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

www.tamilmirror.lk

# தமிழ் Mirror

THURSDAY, APRIL 21, 2022

வியாழக்கிழமை ஏப்ரல் 21, 2022 | ஒளி: 07 கதிர்: 285 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | Free




ரம்புக்கனையில் நிராயுதபாணிகளுக்கு எதிரான வன்முறைகள் குறித்து வெளிப்படையான விசாரணையின் அவசியம் குறித்து, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் ரோஹினி மாரசிங்கவுடன் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் கலந்துரையாடியுள்ளார்.

## விசாரணைக்கு குழு நியமனம்

ரம்புக்கனை துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்ததுடன் பலர் காயமடைந்த சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு நான்கு பேர் கொண்ட விசேட விசாரணைக் குழுவை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு நியமித்துள்ளது. தொடர்ச்சி P2

### கடனை செலுத்துவதற்கான

## உத்தரவாதம் அவசியம்

### ஆரம்பக் கட்டத்திலேயே பேச்சு என்கிறது ஐ.எம்.எஃப்




சர்வதேச நாணய நிதியத்தின் சாத்தியமான கடன் திட்டம் தொடர்பில் இலங்கையுடனான கலந்துரையாடல்கள் ஆரம்பக் கட்டத்தில் இருப்பதாகத் தெரிவித்துள்ள சர்வதேச நாணய நிதியம் (ஐ.எம்.எஃப்), இலங்கைக்கு எந்தவொரு கடனையும் வழங்குவதற்கு, கடனை மீளச் செலுத்துவதற்கான தகுந்த உத்தரவாதம் அவசியம் என தெரிவித்துள்ளது. தொடர்ச்சி P2



### முஸ்லிம் எம்.பிக்கள் மூவர்

## இருந்த இடத்துக்கே மீண்டும் தாவினர்

■ பா.நிரோஸ்

எதிர்க்கட்சியில் அமர்ந்துகொண்டு அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கிவந்த மூன்று முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசாங்கத்துக்கு வழங்கி வந்த ஆதரவை நேற்று (20) முதல் விலக்கிக் கொள்வதாக அறிவித்தனர். தொடர்ச்சி P2




## முகக் கவசங்களை அணியுங்கள்

### பொதுமக்களிடம் வைத்திய சங்கம் கோரிக்கை

பொதுப் போக்குவரத்து மற்றும் உள்ளக நிகழ்வுகள் தவிர, பொது இடங்களில் முகக்கவசம் அணிவது கட்டாயமில்லை என்று அரசாங்கம் அறிவித்துள்ள போதும் மக்கள் கூடும் இடங்களில் தொடர்ந்தும் முகக்கவசம் அணியுமாறு அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது. தொடர்ச்சி P2



# ஜனாதிபதியை 225 பேராலும் நீக்க முடியாது

■ ‘அப்பட்டமான பொய்யர்கள்” என கடும் வாக்குவாதம்

■ மௌனம் காத்து சமாளித்தார் தினேஷ்

■ பா.நிரோஸ்

ஜனாதிபதி பதவி விலகுதல் தொடர்பான சர்ச்சைக்குரிய கருத்துத் தொடர்பில் சபாநாயகருக்கும், எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் இடையில் கடும் வாக்குவாதம் இடம்பெற்றதோடு, தனக்கிருக்கும் மூன்றிலிரண்டு பெரும்பான்மையை எதிர்காலத்தில் காண்பிப்பேன் என எதிர்க்கட்சி தலைவர் இதன்போது சூளுரைத்தார். தொடர்ச்சி P2

## உணவு ஒவ்வாமையால் 327 பேர் பாதிப்பு

கொக்கல சுதந்திர வர்த்தக வலயத்திலுள்ள ஆடைத்தொழிற்சாலை ஒன்றில் உணவு ஒவ்வாமையால் பாதிக்கப்பட்ட 327 ஊழியர்கள் காலி, கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக நேற்று (20) அனுமதிக்கப்பட்டதாக வைத்தியசாலையின் பணிப்பாளர் தெரிவித்தார். தொடர்ச்சி P2



### அரசாங்கத்துக்கு எதிரான

## போராட்டங்கள் வலுக்கின்றன

எரிபொருள், அத்தியாவசியப் பொருட்கள் உள்ளிட்டவற்றின் விலையேற்றத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், எரிபொருள் வழங்குமாறு கோரியும் நாடளாவிய ரீதியில் பல இடங்களில் எதிர்ப்பு போராட்டங்கள், நேற்றைய தினமும் (20) முன்னெடுக்கப்பட்டன. தொடர்ச்சி P2

### ரம்புக்கனை விவகாரம்

## 20 பேர் அடங்கிய விசாரணைக்குழு நியமனம்

எரிபொருள் பவுசர்களை சேதப்படுத்த வேண்டாம் என்கிறார் அஜித்



ரம்புக்கனை சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் உட்பட 20 பேர் கொண்ட குழுவொன்றை பொலிஸ் மா அதிபர் நியமித்துள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண, நேற்று (20) தெரிவித்தார். தொடர்ச்சி P2

## “மிருகத்தனமான தாக்குதல்”

ரம்புக்கன துப்பாக்கிச்சூடு சம்பவம் இருள் சூழ்ந்த ஒரு நாளை வெளிப்படுத்துவதுடன் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீதான அரசின் மிருகத்தனமான தாக்குதலானது ரத்துபஸ்வல முதல் ரம்புக்கனை வரை தொடர்கிறது. இந்தச் சம்பவத்தில் அதிகார துஷ்பிரயோகம் செய்தவர்கள் மீது பாரபட்சமற்ற விசாரணை நடத்தப்பட தொடர்ச்சி P2



### ரம்புக்கனை துப்பாக்கிச்சூடு சம்பவம்:

## சர்வதேசம் கடும் கண்டனம்

ரம்புக்கனை துப்பாக்கிச்சூடு சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்தமை மற்றும் பலர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் இந்தச் சம்பவம் குறித்து சர்வதேச அமைப்புகள் மற்றும் சர்வதேச நாடுகளின் தூதுவர்கள் தமது கண்டனங்களை வெளிப்படுத்தியுள்ளனர். முழுச் செய்தி P7

## வன்முறை சம்பவங்கள் பரவலாம்

### ரணில் எச்சரிக்கை

■ பா.நிரோஸ்



ரம்புக்கனையில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் பரவுமென தகவல்கள் கிடைத்துள்ளதாக முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எம்.பி எச்சரித்தார். தொடர்ச்சி P2

### பவுசர்கள், ரயில்களுக்கு

## விமானப்படை பாதுகாப்பு



■ பா.நிரோஸ்

எரிபொருட்களை நாடு முழுவதிலும் விநியோகிக்கும் பவுசர்கள், ரயில்களுக்கு விமானப்படையின் பாதுகாப்புகளை வழங்கத் தீர்மானித்துள்ளதாகவும், பொதுமக்கள் மேற்கொள்ளும் போராட்டங்களை தாம் ஒருபோதும் தடுக்க மாட்டோம் எனவும் ஆனால் அத்தியாவசிய சேவைகளை பாதிக்கும் தொடர்ச்சி P2

## சிங்கள மக்களைப் போல வேடிக்கை பார்க்கமாட்டோம்

■ பா.நிரோஸ்



மனிதப் படுகொலைக்கு எதிராக தற்போது சிங்கள மக்களுடன் ஒன்றிணைந்துள்ளோம். படுகொலைக்கு இனி இடமளிக்க முடியாது என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார். தொடர்ச்சி P2

### பட்டப் பெயருடையவரின்

## பிறந்தநாளில் காகம் தினம்

ஏதாவது அனர்த்தங்கள், விபத்துக்கள் இன்றேல், வீதிகளில் வளைவுகள் இருக்குமாயின், வீதிகளின் குறுக்காக மிருகங்கள் நின்றிருந்தால், ஒரு சமிக்ஞையை காண்பிப்பதற்காக வாகனங்களில் ஹோன்கள் (ஒலி) எழுப்பப்படும். தொடர்ச்சி P2


## ஹிட்லராக மாறினார் கோட்டா

■ பா.நிரோஸ்



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகும்வரையில் போராட்டங்களை மக்கள் விடுவதாக இல்லை என சபையில் தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் மனுச நாணயக்கார, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, ஹிட்லராக மாறியுள்ளார் எனவும் தெரிவித்தார். தொடர்ச்சி P2

## “உரிமைகளைப் பாதுகாக்க ஒத்துழைப்பு நல்குவோம்”



ரம்புக்கனையில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூடு சம்பவம் தொடர்பில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் அதிர்ச்சியடைவதுடன் உயிரிழந்தவர் மற்றும் காயமடைந்தவர்கள் பற்றி கேள்விப்பட்டதில் ஆழ்ந்த வருத்தமளிக்கின்றது. தொடர்ச்சி P2

## கூட்டமைப்பு கண்டனம்

ரம்புக்கனையில் பொதுமக்களின் ஆர்ப்பாட்டத்தில் பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் துரதிஷ்டவசமாக ஓர் உயிர் பலியாகியுள்ளது. இதனை நாங்கள் வன்மையாக கண்டிக்கின்றோம் என தெரிவித்துள்ள தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, தொடர்ச்சி P2

## விசாரணைக்கு...

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவரின் நேரடி பணிப்பின் பெயரில் சுலாரி லியனகம, மேனகா ஹேரத், லால் வீரசிங்க, மற்றும் ஏ.எஸ். நிலாந்த ஆகியோர் சிறப்பு விசாரணை குழுவில் நியமிக்கப்பட்டுள்ளதுடன், நேற்றைய தினம் சம்பவ இடத்திற்கு நேரடி விசாரணைகளை நடத்தவும் சென்றுள்ளனர்.

மக்களின் ஜனநாயக போராட்டத்தில் துப்பாக்கி சூடு நடத்த உத்தரவு வழங்கியது யார் என்பது குறித்தும், நேரடி தோட்டாக்களால் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்ட சூழ்நிலையையும் தீர்மானிக்க விசாரணை நடத்தவே இந்த குழு நியமிக்கப்பட்டுள்ளதுடன், விசாரணை அறிக்கையின் அடிப்படையில், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தேவையான பரிந்துரைகளை முன்வைக்கும் எனவும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

## உத்தரவாதம்...

இலங்கை பிரதிநிதிகளுடன் கடன் வழங்குவதற்கான மாற்றுத் திட்டங்கள் மற்றும் கொள்கை வகுப்பு தொடர்பில் கலந்துரையாடியதாக சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கை தொடர்பிலான குழுவின் தலைவர் மஷிஹிரோ நொசாகி தெரிவித்துள்ளார் என, ரொய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியினால் மக்கள் அடைந்துள்ள துயரங்கள் தொடர்பில் சர்வதேச நாணய நிதியம் இதன்போது கவலை தெரிவித்துள்ளது.

இலங்கையில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் மற்றும் பொருளாதார பிரச்சினைகளை மிக விரைவில் நிலையான முன்னேற்றப்பாதை நோக்கி கொண்டுசெல்வதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் அனுசரணையுடன் திட்டமொன்றை வகுக்க வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

உடனடி நிதித்தேவையை நிவர்த்திசெய்வதற்காக கடனை மீளச் செலுத்துவதற்குள்ள இயலுமையை ஆராய வேண்டும் எனவும் சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கை தொடர்பிலான குழுவின் தலைவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, நிதி அமைச்சர் அலி சப்ரி, தெற்காசிய பிராந்தியத்துக்கான உலக வங்கியின் பிரதித் தலைவர் ஹார்ட்விக் ஷாஃபருடன் இலங்கையின் பொருளாதார நெருக்கடி, கடன் மறுசீரமைப்பு குறித்து, கலந்துரையாடியுள்ளார்.

இலங்கைக்குத் தேவையான உணவுப் பொருட்கள் மற்றும் மருந்துகளை வழங்குவதற்கும், கல்வி மற்றும் சுகாதாரத் தேவைகள் தொடர்பான ஆதரவை வழங்குவதற்கும் உலகவங்கி உறுதிபூண்டுள்ளதாக உறுதியளித்தார்.

## இருந்த இடத்துக்கே...

பாராளுமன்றத்தின் நேற்றைய அமர்வில் கலந்துகொண்டு விசேட அறிவிப்பை விடுத்து உரையாற்றிய ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் பைசல் காசிம், அரசாங்கத்துக்கு இதுவரையில் வழங்கிவந்த ஆதரவை தானும் பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.எஸ்.தௌபீக், இசாக் ரஹ்மான் ஆகியோர் விலக்கிக்கொள்வதாக அறிவித்தார்.

நாட்டின் பொருளாதார நெருக்கடி நிலைமைகளுக்கு தீர்வைக் காண்பதற்காக நாம் முன்வைத்த யோசனைகளை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதாலேயே ஆதரவை நீக்கிக்கொள்ள தீர்மானித்துள்ளோம் எனவும் சபைக்கு அறிவித்தார்.

## முகக் கவசங்களை...

முகக்கவசம் அணிதல் மற்றும் கை தொற்றுநீக்கிகளை பயன்படுத்துதல் உட்பட சுகாதார வழிகாட்டுதல்களைக் கடைப்பிடிப்பதன் காரணமாக சுவாசக் கோளாறுகளால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுவோரின் எண்ணிக்கை குறைந்துள்ளதாக சங்கத்தின் செயலாளர் டொக்டர் செனல் பெர்னாண்டோ சுட்டிக்காட்டினார்.

எரிபொருள் மற்றும் மருந்து தட்டுப்பாடு காரணமாக நாட்டின் சுகாதார அமைப்பு வீழ்ச்சியின் விளிம்பில் இருப்பதாகவும் சுவாசக் கோளாறால் பாதிக்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை குறைவது மருந்து கையிருப்புகளைப் பாதுகாப்பதற்கான பெரும் சலுகையாகும் என்றும் குறிப்பிட்டார்.

தொடர்ந்து நடைபெறும் போராட்டங்கள் மற்றும் கூட்டங்களில் கலந்துகொள்ளும் போது சுகாதார விதிமுறைகளை கடைபிடிக்குமாறு பொதுமக்களை அவர் கேட்டுக்கொண்டார்.

# 225 பேராலும் நீக்க முடியாது

முன்னதாக கருத்துரைத்திருந்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, "எதிர்க்கட்சித் தலைவர்கள் உட்பட கட்சிகளின் தலைவர்கள் கையொப்பமிட்டு, ஜனாதிபதிக்கு கடிதத்தை கையளித்தால் ஜனாதிபதி பதவிவிலகுவார். அதற்கான நேரத்தை தான் ஏற்படுத்தி தருவேன் என நீங்கள் (சபாநாயகர்) கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் தெரிவித்திருந்தீர்கள். ஆகையால் அதற்கான நேரத்தை ஒதுக்கித்தருமாறு கேட்டிருந்தார்.

சஜித் பிரேமதாஸவின் இந்த விடயம் சம்பந்தமான செய்தி, சமூக ஊடங்களில் வைரலாகின. எனினும், சிறிது நேரத்துக்குப் பின்னர், சபைக்கு வந்து, அறிவிப்பொன்றை விடுத்த சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, " ஜனாதிபதி பதவி விலகல் தொடர்பில், சமூக ஊடகங்களில் வெளியாகியிருக்கும் செய்தி தவறாது, நான் அப்படி கூறவில்லை என்றார்.

மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் வருபவர்களுக்கு அரசாங்கத்தை வழங்குவதற்கு ஜனாதிபதி தயாராக இருப்பதாகவே கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் நான் கூறினேன். எனினும் நான் கூறியதை எதிர்க்கட்சி தலைவர் தவறாக அர்த்தம் கற்பித்துள்ளார் என்றார். மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் செல்வோருக்கு அரசாங்கத்தை வழங்குவதற்கு ஜனாதிபதி தற்போதும் தயாராகவே இருக்கிறார். எவ்வாறாயினும் ஜனாதிபதி ஒருவரை அப்பதவியிலிருந்து நீக்குவதற்கான அதிகாரம் பாராளுமன்றத்தில் உள்ள 225 எம்.பிக்களுக்கும் இல்லை என்பதைப் புரிந்துக்கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார்.

எனினும், இதன்போது குறுக்கீடு செய்த சஜித் பிரேமதாஸ, கட்சித் தலைவர்கள் இணைந்து கடித்தை கையளித்தால் ஜனாதிபதி பதவி விலகுவதற்கு தயாராக இருக்கிறார்கள் என்றே சபாநாயகர், கட்சி தலைவர் கூட்டத்தில் கூறினார். இப்போது சபாநாயகர் பொய் சொல்கிறார் என்றார். நான் பொய்சொல்வில்லை என பதிலளித்த சபாநாயகர், நீங்கள்தான் பொய் சொல்கின்றீர்கள் என சஜித் பிரேமதாஸவை பார்த்து கூறினார்.

கட்சித் தலைவர்கள் கூட்டத்தில், மேற்படி விவகாரம் தொடர்பில், நீங்கள் கூறியதில், எந்தவொரு விசிறி (ʽ) சுழிவிசிறி (ʼ) மாற்றாது. அப்படியே ஒப்புவித்தேன் என்றார். அதனையும் பொய்யென சபாநாயகர் மறுத்துவிட்டார்.

சபாநாயகர் கூறும்போது அமைச்சர் தினேஸ் குணவர்தன இருந்தார். நான் பொய் சொல்கிறேனா? என்பதை தினேஸ் கூற வேண்டும் எனக் கேட்டார். எனினும், சபையில் இருந்த தினேஸ் குணவர்தன எதனையும் கூறாது. அமைதியாகவே இருந்துவிட்டார்.

ஒழுங்குப் பிரச்சினை எழுப்பி, எழும்பியிருந்த சஜித் பிரேமதாஸ, நான் பொய் சொல்லவில்லை. சபாநாயகர் ஒரு பொய்யர். சபாநாயகர் பொய்யர் மட்டுமல்ல அப்பட்டமான பொய்யர், என பல முறை உரக்கக் கூறினார்.

நானனல்ல நீங்கள்தான் அப்பட்டமான பொய்யர் என, சபாநாயகர், பதிலளித்து, இந்த விடயத்தை இத்துடன் நிறுத்திக்கொண்டு அடுத்த விடயத்துக்குச் செல்வோம் என, சபை நடவடிக்கையை நகர்த்தினார்.

எனினும், தொடர்ந்தும் கருத்துரைத்த சஜித் பிரேமதாஸ, மூன்றிலிரண்டு பெரும்பான்மை எமக்கு இருக்கிறது. அதனை எதிர்காலத்தில் நாம் காண்பிப்போம் எனக் கூறியமர்ந்தார்.

## உணவு ஒவ்வாமையால்...

காலை உணவு ஒவ்வாமை காரணமாக அனுமதிக்கப்பட்டவர்களில் 16 பேர் ஆபத்தான நிலையில் இருப்பதாக கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் குறிப்பிட்டார். வாந்தி, தலைச்சுற்று, வயிற்றுவலி உள்ளிட்ட நோய் அறிகுறிகளுடன் குறித்த நோயாளர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

கோழி இறைச்சியுடன் பரிமாறப்பட்ட உணவே இவ்வாறு சமிபாடடையாமல் இருந்திருக்கலாம் என வைத்தியர்கள் சந்தேகபடுகின்றனர்.

## கூட்டமைப்பு கண்டனம்

இது குறித்து உடனடியாக சுயாதீன விசாரணை ஒன்றினை நடத்தப்பட வேண்டும் எனவும், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் உடனடியாக பதவி விலக வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளது.

## வலுக்கின்றன போராட்டங்கள்

எரிபொருள், அத்தியாவசியப் பொருட்கள் உள்ளிட்டவற்றின் விலையேற்றத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், எரிபொருள் வழங்குமாறு கோரியும் நாடளாவிய ரீதியில் பல இடங்களில் எதிர்பபு போராட்டங்கள், நேற்றையதினமும் (20) முன்னெடுக்கப்பட்டன.

அத்துடன், ரம்புக்கனையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்துக்கும் போராட்டங்களின் போது எதிர்ப்பு வெளியிடப்பட்டன.

பல நகரங்களில் வீதிகள் மறிக்கப்பட்டு டயர்கள் எரிக்கப்பட்டு போக்குவரத்துக்கு தடை ஏற்படுத்தப்பட்டிருந்தமையையும் அவதானிக்கமுடிந்தது.

மாத்தறை மகாநாம பாலத்துக்கு அருகிலுள்ள பிரதான வீதியை மறித்து எதிர்ப்பில் ஈடுபட்டவர்களை கலைப்பதற்காக நேற்று (20) அதிகாலை கண்ணீர்ப் புகைப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், 8 பேர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பலப்பிட்டிய நகர் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட போராட்டத்தால் கொழும்பு - காலி வீதியின் போக்குவரத்து தடைப்பட்டிருந்தது.

தம்புள்ளையில் ஏ9 மற்றும் ஏ6 வீதிகளை மறித்து இடம்பெற்ற போராட்டத்தால் அவ்வீதிகளில் போக்குவரத்து கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந்தது.

இதேவேளை, மலையகத்தின் பல பகுதிகளிலும் எதிர்ப்பு போராட்டங்கள் இடம்பெற்றன.

பதுளை - பசறை பிரதான வீதி, பொரலந்தை, வெலிமடை, ரெந்தபோல மற்றும் பூனாகலை தோட்டப் பகுதிகளிலும் நுவரெலியா, பதுளை உள்ளிட்ட இடங்களிலும் போராட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

## 20 பேர் அடங்கிய...

இதேவேளை, எரிபொருள் ஏற்றிச் செல்லும் வாகனங்களுக்கு இடையூறு விளைவிப்பது அல்லது சேதப்படுத்துவதைத் தவிர்க்குமாறு பொதுமக்களிடம் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

பௌசர்கள் மூலம் எரிபொருள் விநியோகம் தொடர்வதாகவும் பல்வேறு குழுக்களால் நேற்றுமுன்தினம் பல எரிபொருள் பௌசர்கள் சேதப்படுத்தப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

எரிபொருள் விநியோக பொறிமுறை சீர்குலைந்தால் அது மருந்து, உணவு மற்றும் ஏனைய பொருட்களின் போக்குவரத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்று தெரிவித்த அவர், எரிபொருள் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்துவதை பொதுமக்கள் தவிர்க்க வேண்டும் என்றார்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் அமைதியான முறையில் பேரணிகளை நடத்துமாறு அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

## ஹிட்லராக...

ரம்புக்கன பொலிஸாரால் சூட்டிக்கொள்ளபட்ட நபரின் சகோதரர், தனது சகோதரர் கொலை செய்யப்படுவதை தொலைபேசியில் வீடியோ எடுத்த நிலையில் அவரை பொலிஸார் தாக்கி பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச்சென்று அவரது தொலைபேசியை பறித்துள்ளனர்.

பவுசரை எரிக்க செல்லும் போது இளைஞர் மீது துப்பாக்கியில் சுடவில்லை. வேறொரு இடத்தில் வைத்தே இளைஞர் சுட்டுக் கொலைசெய்திருக்கிறார்கள். துப்பாக்கிச்சூடு பிரயோகத்தை மேற்கொள்ள உத்தரவிட்ட எஸ்.எஸ்.பி குடிபோதையில் எந்நேரமும் இருக்கக்கூடிய ஒருத்தர் எனவும் தெரிவித்தார்.

## வன்முறைச்...

பாராளுமன்றத்தின் நேற்றைய (20) அமர்வில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய ரணில், நாடு தற்போதும் மிகவும் ஆபத்தான நிலையில் இருக்கிறது. இதிலிருந்து நாட்டை எவ்வாறு மீட்டெடுப்பது என்பதுத் தொடர்பில் நாம் கலந்துரையாட வேண்டும். ரம்புக்கனயில் இடம்பெற்ற சம்பவம் நாட்டின் ஏனையப் பகுதிகளுக்கும் பரவும் என தகல்கள் தெரிவிப்பதாகவும் ரணில் சபைக்கு அறிவித்தார்.

மேலும் ரம்புக்கனயில் உயிரிழந்த இளைஞரின் தாயாருடன் நான் தொலைபேசியில் உரையாடியிருந்தேன். அந்த குடும்பத்துக்கு நாம் ஏதாவதொன்றை செய்ய வேண்டும் எனவும் தெரிவித்தார்.

## விமானப்படை...

பொதுமக்கள் நடந்துகொள்ள வேண்டாம் எனவும் மின்சாரம், எரிசக்திஅமைச்சர் காஞ்சன விஜேசேகர சபையில் கோரிக்கை விடுத்துள்ளதோடு, போராட்டங்கள் ஊடாக போக்குவரத்துக்கு தடை ஏற்பட்டால் எரிபொருள் விநியோகிக்கும் செயற்பாடுகள் முழுமையாகப் பாதிப்படையும் எனவும் எச்சரித்தார்.

அத்தியாவசிய போக்குவரத்து சேவைகளை தொடர்ந்து முன்னெடுக்க இடமளிக்கவேண்டும். போராட்டங்களை மேற்கொண்டு வீதிகளை மறித்து போக்குரத்து சேவைகளுக்கு இடையூறுகளை ஏற்படுத்தும் பட்சத்தில் தொழிற்துறை, சுகாதாரத்துறை பாதிக்கப்பட்டு வைத்தியசாலைகளில் உள்ள நோயாளர்கள் உயிரிழக்கும் நிலைஏற்பட்டதால் அதற்கு எதிர்க்கட்சியே பிரதானமாகப் பொறுப்புக்கூறவேண்டும்எனவும் தெரிவித்தார்.

ரயில்கள், பவுசர்கள் ஊடாக ஏற்றிச்செல்லப்படும் எரிபொருள்களுக்கு பாதுகாப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் எனவும் தெரிவித்ததோடு, இல்லை என்றால் போதுமான அளவு எரிபொருள் எம்மிடம் இருந்து அதனை நாடு முழுவதிலும் விநியோகிக்க முடியாத நிலை ஏற்படும் எனவும் தெரிவித்தார்.

ரம்புக்கனை ஏற்பட்ட கலவரத்தை எரிபொருள் பவுசர், எரிபொருள் நிரப்பு நிலையங்களுடன் சம்மந்தப்படுத்த வேண்டாம்.

## சிங்கள மக்களைப் போல...

பாராளுமன்றத்தில் நேற்று (20) உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், "ஆளும் தரப்பின் உறுப்பினர்கள், காலி முகத்திடல் பக்கம் சென்றால் சுவையான உணவு உண்டுவிட்டு வரலாம் எனத் தெரிவித்த அவர், சமிந்த லக்ஷான் என்ற இளைஞரின் இழப்பிற்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் ஒருங்கிணைப்பாளராக பதவி வகித்ததையிட்டு கவலையடைகிறேன். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வாழும் மக்கள் இந்த அரசாங்கத்தின் படுகொலையினை 1950ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்து எதிர்க்கொண்டு வருகிறார்கள். 2009ஆம் ஆண்டு யுத்தம் நிறைவடைந்த காலத்திலிருந்து பலர் கொல்லப்பட்டுள்ளார்கள். அளுத்கம, திகன, உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் முஸ்லிம் சமூகத்தினர் இந்நிலைமையை எதிர்க்கொண்டுள்ளார்கள்.

அக்காலப்பகுதியில் இலங்கை மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து அரசாங்கத்தின் செயற்பாட்டிற்கு எதிர்ப்பு தெரிவிக்கவில்லை என தற்போது கவலையடைய போவதில்லை. மனித படுகொலைக்கு எதிராக தற்போது சிங்கள மக்களுடன் ஒன்றிணைந்துள்ளோம். படுகொலைக்கு இனி இடமளிக்க முடியாது. அதற்கு மேலதிகமாக ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் ஊடாக கத்தோலிக்க மக்களும் படுகொலை செய்யப்பட்டார்கள்.

அரசாங்கத்திற்கு படுகொலை செய்யமட்டுமே தெரியும், லசந்த விக்ரமதுங்க, ரத்துபஸ்வல, வெலிகட உள்ளிட்ட பல படுகொலைகள், தமிழ் ஊடகவியலாளர்கள் கொலை செய்யப்பட்டார்கள்.

## பட்டப் பெயருடையவரின்...

அந்த சத்தங்களுக்கு இரண்டு அர்த்தங்கள் கற்பிக்கப்படுகின்றன. அதிலொன்று, "கோட்டா கோ ஹோம்" என்று சிலர் அர்த்தப்படுத்திக்கொள்கின்றனர். இன்றும் சிலர், "கா... கா... கா..." என அர்த்தப்படுத்துகின்றனர். நமது நாட்டின் கேட்கும் ஹோரன் சத்தங்களுக்கு இவ்விரு அர்த்தங்கள் இரண்டில், எந்த சத்தத்தை வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளலாம்.

"கா... கா... கா..." என்றே கேட்கிறது. காகத்துக்கு சிங்களத்தில் கப்புட்டா எனக்கூறுவர், முன்னாள் நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷவின் பட்டப்பெயரும் கப்புட்டா (காகம்) என்பது யாவரும் அறிந்தது.

அந்த காகங்களுக்கு ஒரு தினமுள்ளது. அதாவது, " சர்வதேச காகங்கள் தினம்" இந்தத் தினம் ஏப்ரல் 27 ஆம் திகதியாகும். அதேபோல, பசில் ராஜபக்ஷவின் பிறந்த தினமும் ஏப்ரல் 27 என்பது குறிப்பிடத்தக்கது.

## "உரிமைகளை பாதுகாப்ப...

அதேபோல் இந்த சம்பவம் குறித்து சுயாதீனமான விசாரணை நடத்தப்பட வேண்டும். அத்துடன் ஆர்ப்பாட்டக்காரர்களின் உண்மையான கோரிக்கைகளை கருத்தில் கொண்டு பொலிசாரும் ஆயுதப்படைகளும் மிகுந்த கட்டுப்பாட்டுடன் செயல்படுவதை அரசாங்கம் உறுதி செய்ய வேண்டும்.

இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறக்கூடாது என்பதை ஆரம்பத்தில் இருந்தே நாம் சுட்டிக்காட்டிவந்தோம். மக்களின் உரிமைகளைப் பாதுகாக்க எமது உறுப்பினர்கள் தொடர்ந்து தங்களால் இயன்ற சகல ஒத்துழைப்புக்களை வழங்குவார்கள் என செய்வார்கள் என இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் தெரிவித்துள்ளார்.

## "மிருகத்தனமான தாக்குதல்"

வேண்டும் என முன்னாள் சபாநாயகர் கரு ஜெயசூரிய தெரிவித்துள்ளார். மக்களைப் பாதுகாப்பதன் மூலம் தேசிய பாதுகாப்பு குறித்த ஜனாதிபதியின் வாக்குறுதியை நிலைநாட்ட வேண்டும் எனவும் அவர் கோரியுள்ளார்.





பா. நிரோஸ்
ddnirosh@gmail.com


ரணில், சஜித்

# வாக்குவாதத்தால் சபை ஒத்திவைப்பு

பாராளுமன்றத்தின் நேற்றை (20) அமர்வின்போது, ரம்புக்கன விவகாரங்களை எங்கு கலந்துரையாடுவது என்பது தொடர்பில் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும், ஐ.தே.கவின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் கடும் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது.

முன்னதாக கருத்துரைத்த ரணில் கட்சித் தலைவர்கள் கூட்டத்தை கூட்டி கலந்துரையாடுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென கோரிக்கை விடுத்தார்.

எனினும், நேரத்தை வீணடிக்க தேவையில்லை. எதைப்பேசவேண்டும் என்றாலும் சபையிலேயே பேசுவோமென சஜித் கூறினார்.

இருபிள்ளைகளின் தந்தை உயிரிழந்துள்ளார். ஒருவரின் வாழ்க்கையே தொலைந்துள்ளது. இதுவே பிரதானமாக பேசப்பட வேண்டிய விடயம் என கடுந்தொனியில் சஜித் கூறினார்.

எனினும், அமர்வு நடவடிக்கைகளை றையாக ஆரம்பித்துவிட்டு இச்சம்பவம் தொடர்பில் விரிவாகபேசுவோமென சபாநாயகர் கூறியபோதிலும், பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும் ஒழுங்குப்பிரச்சினை எழுப்பி இச்சம்பவம் தொடர்பில் கருத்துக்கூற முற்பட்டதால் கூச்சல் குழப்பம் ஏற்பட்டது. இதனால் சபைநடவடிக்கைகளை சபாநாயகர் நேற்று (20) காலையிலேயே 10 நிமிடங்கள் ஒத்திவைத்தார்.

ரம்புக்கன கலவரம்;

# உயர்நீதிமன்ற நீதிபதிகளின் விசாரணை வேண்டும்

ரம்புக்கன சம்பவம் தொடர்பில் ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதிகள் கொண்ட குழு நியமிக்கப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென தெரிவிக்கும் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ, மிரிஹான போராட்டத்தின்போது அரசாங்கத்தைச் சேர்ந்தவர்களே பஸ்ஸை எரித்ததாகவும் குற்றம்சுமத்தினார்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரின் உரையை நாம் முழுமையாக நிராகரிக்கிறோம். அவர் பாராளுமன்றத்தை தவறாக வழிநடத்துகிறார். அமைதியான முறையில் ஜனநாயகரீதியில் போராட்டத்தில் ஈடுபட்ட சமிந்த லக்ஷான் என்கிற கொலை செய்யப்பட்டுள்ளார். இந்த உயிரிழப்புக்கு ராஜபக்ஷர்களின் மிலேச்சத்தனமான, அரச பயங்கரவாதம் இதற்குப் பொறுப்புக்கூற வேண்டும் எனவும் தெரிவித்தார்.

குறைந்தளவான பலத்தைப் பயன்படுத்தி போராட்டத்தை தடுக்க வேண்டுமென ரம்புக்கன கலவரத்தின்போது கூறப்பட்டதாகக் கூறுகிறார்கள். துப்பாக்கியால் சுடுவதா குறைந்தளவான பலம்? கொலை செய்வதா குறைந்தலவான பலம்? எனவும் சஜித் இதன்போது கேள்வி எழுப்பினார்.



எனது உரையை கேட்டுக்கொண்டிருக்க முடியாத நரிகள் ஊளையிடுகின்றன இதனைக் கண்டு நாம் அஞ்சுப்போவதில்லை. நாட்டு மக்களை இந்த மிலேச்சத்தனமான அரசாங்கம் கொலை செய்யப் பார்க்கிறது. துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொள்ள உத்தரவிட்ட எஸ்.எஸ்.பி யார்? அவரின் பெயர் என்ன என்பதை அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும் எனவும் தெரிவித்தார். கொலை செய்தா பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் தனது வேலைகளை ஆரம்பித்தார்? சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடப்படுவது இந்த அரசாங்கத்துக்கு தெரியாதா? நாட்டு மக்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் சுதந்திரம் இருப்பது தெரியாதா? எனவும் கேள்வி எழுப்பினார்.

பவுசரை எரிக்க வந்ததாலேயே ரம்புக்கனை கொலை செய்யப்பட்ட நபர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாக கூறுகிறார்கள். பால்மாவையும், எரிபொருளையும், சீனி, காஸையும் பெற்றுக்கொள்ள வந்தவரையே அரசாங்கம் கொலை செய்துள்ளது எனவும் தெரிவித்தார்.

நாட்டில் ஆட்சியில் இருப்பது கொலைக்கார அரசாங்கம். மக்கள் பலத்தைக்கொண்டு விரட்டியடிப்போம் எனவும் தெரிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர், ரம்புக்கனையில் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொள்ள உத்தரவிட்ட எஸ்.எஸ்.பி ஆகியோரைப் பாராளுமன்றத்துக்கு அழைத்து வர வேண்டும் எனவும் சஜித் இதன்போது சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்தார்.

இதேவேளை ரம்புக்கனக்கு வந்த எரிபொருள் பவுசர், எரிபொருள் நிரப்பு நிலையத்தின் உரிமையாளர் தொடர்பிலும் சஜித் கேள்வி எழுப்பினார். பொலிஸாரின் சுயாதீனமான விசாரணைகளில் எமக்கு நம்பிக்கையில்லை. ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதிகளின் கொண்ட குழு நியமிக்கப்பட்டு ரம்புக்கன சம்பவம் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சி தலைவர்கள் ஜனாதிபதியிடம் சென்று பதவி விலக வேண்டுமென கோரிக்கை விடுத்தால், ஜனாதிபதி பதவி விலக தயாராக இருப்பதாக சபாநாயகர் கூறியிருந்தார். அதனை செய்வதற்கு நாம் தயாராகவே இருக்கிறோம் என்றார்.

# எங்களது ஆட்சியில் எவர் மீதும் துப்பாக்கிகள் திரும்பவில்லை

குற்றவாளிகளைக்கூட எமது ஆட்சிக் காலத்தில் சுட்டுக்கொலை செய்யவில்லை என தெரிவிக்கும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் எத்தனைப் பேரைப் பொலிஸார் சுட்டுக்கொன்றுள்ளனர் எனவும் கேள்வி எழுப்பினார்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலுக்கும் எனக்கும் எந்தவிதமான தொடர்பும் இருப்பதாக எந்த இடத்திலும் உறுதி செய்யப்படவில்லை. எனவே இது தொடர்பில் என்மீது முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களை கவலையளிக்கிறது.



ரம்புக்கன சம்பவத்தின்போது ஓடிக்கொண்டிருக்கும் மக்களை விரட்டியே பொலிஸார் துப்பாக்கியால் சுடுகிறார்கள். எனது ஆட்சிக்காலத்தில் சாதாரண மனிதர்கள், குற்றவாளிகளுக்கு எதிராகக் கூட துப்பாக்கிப்பிரயோகங்களை நாம் மேற்கொள்ளவில்லை. தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் பொலிஸார் எத்தனை பேரை சுட்டுக்கொன்றுள்ளனர்? எனவும் கேள்வி எழுப்பினார்.

கொலை செய்யப்பட்ட இளைஞருக்கும், துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்தவர்களுக்கு நாம் எமது கவலையை தெரிவித்ததோடு, தனது எதிர்ப்பையும் இதன்போது பதிவு செய்தார்.

# ஒரு மனித உயிரா ஒருமணிநேர உணவா

ஒரு மனித உயிரா ஒருமணிநேர உணவா என்ற சர்ச்சை எதிர்க்கட்சிக்கும் அரச தரப்புக்குமிடையில் வெடித்த நிலையில் இறுதியில் எதிர்க்கட்சியினரின் ''ஒரு மனித உயிரே'' வெற்றி பெற்றது.

பாராளுமன்றம் நேற்று புதன்கிழமை காலை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது, ரம்புக்கன துப்பாக்கிச்சூட்டு சம்பவம் தொடர்பான வாதப் பிரதிவாதங்கள் தொடர்ந்த நிலையில் மதிய உணவுக்காக 12.30 மணிக்கு சபையை ஒத்திவைக்க வேண்டி இருந்தது. ஆனால் வாதப்பிரதிவாதங்கள் முடியாததால் மதிய உணவுக்காக நேரம் தேவையில்லை என்றும் சபை நடவடிக்கையை தொடரவேண்டும் என்றும் எதிர்கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாச உட்பட்டவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

ஆனால் சபை முதல்வரான அமைச்சர் தினேஷ் குணவர்தன இதற்கு உடன்படாது மத்திய உணவுக்காக சபை நடவடிக்கையை ஒத்திவைக்க வேண்டும். கட்சித்தலைவர்கள் கூட்டத்தில் எட்டப்பட்ட இணக்கத்தின் படியே சபை நடவடிக்கை முன்னெடுக்கப்பட வேண்டும். தேவையானால் மாலை 4.30 மணிக்கு பின்னர் அது தொடர்பில் பேச முடியும் என்றார். அப்படியானால் மதிய உணவுக்காக சபையை ஒத்திவைக்காதிருக்க வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும் என்று எதிர்கட்சியினர் கோரினர். எனினும் சபை முதல்வரான அமைச்சர் தினேஸ் குணவர்த்தன வாக்கெடுப்புக்கு உடன்படவில்லை. நாம் ஒரு மனித உயிர் தொடர்பாக பேசுவதற்காக நேரம் கேட்கின்றோம். ஆனால் அமைச்சர் தினேஷ் குணவர்தனவோ ஒரு மணிநேர உணவே முக்கியம் என்கின்றனர் ஒரு மனித உயிருக்காக ஒரு மணிநேர உணவைத் தியாகம் செய்ய முடியாதா ?எமக்கு உணவு முக்கியமல்ல. மக்கள் உணவுக்காக போராடுகையில் அரசு உணவு நேரத்துக்காக போராடுகின்றது என எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாச குற்றம்சாட்டினார்.

இந்நிலையில் ஆளுந்தரபு எம்.பி. யான முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக் வெலவும் எதிர்க்கட்சியினரின் கோரிக்கைக்கு ஆதரவாக கருத்தை வெளியிட்டார். இதனையடுத்து எதிர்க்கட்சியினரின் கோரிக்கைக்கு இண ங்கிய சபை முதல்வரான அமைச்சர் தினேஷ் குணவர்தன , இந்த ஒரு மணிநேரமும் எதிர்க்கட்சியில் எத்தனை உறுப்பினர்கள் சபையில் இருக்கின்றனர் என்பதனை நாமும் பார்க்கத்தான் போகின்றோம். எதிர்க்கட்சி பொய் நாடகம் போடுகின்றது என்று கூறினார்.

பவுசர் பற்றியிருந்தால்

# “ரம்புக்கன அழிந்திருக்கும்”

## விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிப்பு

ரம்புக்கன வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, பொலிஸார் தொடர்ந்து பொறுமையுடனும், ஜனநாயகரீதியாகவுமே செயற்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

ரம்புக்கனயில் எரிபொருளை ஏற்றிவந்த பவுசரைப் போராட்டக்காரர்கள் எரிக்க முயற்சித்தார்கள். இதனை பொலிஸார் தடுத்தனர். பவுசர் எரிக்கப்பட்டிருந்தால், ரம்புக்கன என்கிற நகரம் இன்று இருந்திருக்காது எனவும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய (20) அமர்பில் கலந்துகொண்டு விசேட அறிவிப்பொன்றை விடுத்து தொடர்ந்து உரையாற்றிய அவர், ரம்புக்கனயில் இடம்பெற்ற சம்பவம் தனக்குக் கவலையளிக்கிறது. இச்சம்பவத்தில் காயமடைந்தவர்கள், இச்சம்பவத்தில் காயமடைந்த பாதுகாப்புப் பிரிவினருக்கும் தனது கவலையை தெரிவிப்பதோடு, விரைவில் இவர்கள் குணமடைய வேண்டுமென பிராத்திக்கிறேன் எனவும் கூறினார்.



கடந்த காலங்களில் இடம்பெற்ற போராட்டங்களின் போது பொலிஸார் மிகுந்த பொறுமையுடன் செயற்பட்டனர். மக்களின் நாளாந்த வாழ்க்கையை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டனர். நேற்று நாட்டின் பல்வேறுப் பகுதிகளில் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன எனவும் தெரிவித்தார்.

மக்கள் விடுதலை முன்னணியினர் பஸ்களில் மக்களை ஏற்றிவந்து போராட்டங்களில் ஈடுபட்டனர். அதுபோல நேற்று நடைபெற்ற போராட்டங்களின்போது பஸ்களை வீதிகளில் மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர். 10 மணித்தியாலங்களுக்கு மேல் பஸ்களை இடைமறித்தும், ரயில் போக்குவரத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்தியும் குழப்பம் விளைவிக்கும் வகையில் செயற்பட்டனர்.

நாட்டை நாசமாக்கியமைக்கான

# முழுப்பொறுப்பை அரசாங்கம் ஏற்கவேண்டும்

அரசாங்கம் விலகி ச்செல்லவேண்டும். ஒட்டுமொத்த பாராளுமன்றத்தையும் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் அமைச்சரவை நியமிக்கப்பட வேண்டும் என்று தெரிவித்த சுயாதீன எம்.பியான அநுர பிரியதர்ஷன யாப்பா, நாடு பற்றி எரியும் போது பாராளுமன்ற உறுப்பினர்களின் வீடுகளுக்கும் கல் எறிகிறார்கள் எனவும் தெரிவித்தார். ஒழிந்து கொண்டு தீர்வைக்காண முடியாது என்றும் அவர் கூறினார். வும்வர்மேலும் தெரிவித்தார். அரசாங்கம் விலகி செல்வதே புத்திசாலிதனம் என்றார்.



# துப்பாக்கிச்சூட்டுக்கு என்ன அவசரம்?

நெருக்கடி நிலைமைகள் வெடித்துச் சிதறும் நிலையில் இருக்கிறது. எனவே அனைத்து கட்சித்தலைவர்களும் கலந்துரையாடி ஒரு தீர்மானத்துக்கு வந்து அதனை ஜனாதிபதி, அரசாங்கத்துக்கு அறிவிக்கவேண்டுமென ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

சமிந்த லக்ஷான், பவுசருக்கு தீ வைக்க முற்பட்டதாலேயே அவர்மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டதாகக் கூறுகிறார்கள். அவர் அவ்வாறு செய்பவரல்ல. எல்லா இடங்களிலும் போராட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. எல்லா இடங்களிலும் பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகங்களை மேற்கொள்ளவில்லை எனவும் தெரிவித்தார்.

ரம்புக்கனயிலிருந்து பொல்காவல செல்லும் பாதை ஒன்றும் அவ்வளவுப் பெரிய வீதியும் இல்லை.

இவ்வாறான நிலையில் துப்பாக்கிச்சூடு பிரயோகத்தை மேற்கொள்ளும் அளவுக்குப் பொலிஸாருக்கு என்ன அவசரம் எனவும் வினவினார்.


உடனடிச் செய்திகளைத் தமிழ் மொழியில் பெற்றுக்கொள்ள எம்மோடு இணைந்திருங்கள்

தமிழ்Mirror பதிவு செய்வதற்கு



Dialog Type TM and send to 87798
Daily Rs.1/=+ TAX

HUTCH Type TM and send to 2233
Monthly Rs.30/=+ TAX

SLTMOBITEL Type REG TM and send to 77012
Daily Rs.1/=+TAX

பொதுமக்களால் திருகோணமலை

# ஸ்தம்பிதம்

டயர்கள் எரித்து எதிர்ப்பு









■ பைஷல் இஸ்மாயில், எப்.முபாரக்

எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து, திருகோணமலை நகர் பொதுமக்களால் நேற்று (20) ஸ்தம்பித்தது.

திருகோணமலை மணிக்கூட்டு கோபுர சந்தி, அநுராதபுர சந்தி, உப்புவெளி சந்தி, விகாரை சந்தி போன்ற முக்கியமான பல பிரதான வீதிகளை பொதுமக்கள் மறித்து, டயர்களை எரித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் வெளிமாவட்டங்கள், திருகோணமலை உள்ளிட்ட அனைத்து பிரதேச வீதிகளின் போக்குவரத்து தடைப்பட்டதுடன், பொதுமக்களும் அரச உத்தியோகத்தர்களும் பல அசௌகரியங்களுக்கு உள்ளாகினர்.

தனி வாகனங்களில் அரச கடமைக்குச் சென்ற உத்தியோகத்தர்கள் பலர் காரியாலயங்களுக்கு செல்ல முடியாமல், ஆர்ப்பாட்டக்காரர்களால் திரும்பி அனுப்பப்பட்டனர்.

மேலும், பாடசாலைகள் மூடப்பட்டுக் காணப்பட்டதுடன், அரச திணைக்களங்கள், நிறுவனங்கள் மந்தகதியில் இயங்கின. அத்தோடு, கடைகளும் மத்திய மீன் சந்தையும் மூடப்பட்டன.

திருகோணமலை - கண்டி பிரதான வீதியில் அபயபுர சுற்றுவளைவு சந்தியில் மூன்று பக்கமாகவும் ஆர்ப்பாட்டகாரர்களால் வீதித் தடைகள் போடப்பட்டன.



அத்தோடு, திருகோணமலை - கண்டி பிரதான வீதியில் பஸ்ஸை வீதியின் குறுக்கே நிறுத்தி, உப்புவெளி பகுதிக்குச் செல்லும் வீதியும் மறிக்கப்பட்டது.

நேற்று காலை முதல் முன்னெடுக்கப்பட்ட இவ்வாறான எதிர்ப்பு நடவடிக்கைகளால் திருகோணமலை நகரில் பதட்ட நிலைமை ஏற்பட்டிருந்தது.

சட்டத்துறையை அவமதித்த

## நால்வருக்கு அழைப்பாணை

■ நூருல் ஹுதா உமர்

சட்டத்துறைக்கு பேஸ்புக் ஊடாக பங்கம் விளைவித்த மருதமுனையைச் சேர்ந்த நால்வருக்கு, கல்முனை நீதவான் நீதிமன்றால் அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

சட்டத்துறையையும் சட்டத்தரணிகளின் தொழில் தர்மத்தையும் அவமதிக்கும் வகையில் தொடர்ச்சியாக பல பேஸ்புக் பதிவுகளையும் பின்னூட்டங்களையும் இட்டுவந்த நபர்களுக்கெதிராக கல்முனை நீதவான் நீதிமன்றில் சட்டத்தரணி எஸ். எச்.எம். மனார்த்தீனால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

> **“ சட்டத்துறையையும் சட்டத்தரணிகளின் தொழில் தர்மத்தையும் அவமதிக்கும் வகையில் பேஸ்புக் பதிவுகளை இட்டுவந்த நபர்களுக்கெதிராக வழக்கு தாக்கல்**

இந்த வழக்கு, நேற்று முன்தினம் (19) எடுக்கப்பட்டபோது, முறைப்பாட்டாளர் சார்பில் சட்டத்தரணி ஏ.எம். றகீப் தலைமையில் ஆஜரான சட்டத்தரணிகள் மேற்கொண்ட சமர்ப்பணத்தில் திருப்தியுற்ற நீதிவானால் மேற்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

குறித்த நால்வரையும் எதிர்வரும் 25ஆம் திகதி மன்றில் ஆஜராகுமாறு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.









சிறுமியின் வீடியோவை வைத்து

## தாயிடம் கப்பம் கோரிய இருவருக்கு விளக்கமறியல்

### டுபாய்க்கு பறந்தவருக்கு வலைவீச்சு

■ பாறுக் ஷிஹான்

13 வயதுச் சிறுமியைத் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய வீடியோவை, அச்சிறுமியின் தாயிடம் காட்டி 10 இலட்சம் ரூபாய் கப்பம் கேட்டு நீண்டகாலமாக மிரட்டி வந்த இரு சந்தேகநபர்களையும், எதிர்வரும் மே மாதம் 02ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, கல்முனை நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

தனது மகளின் வீடியோவை முன்வைத்து, மூவர் கப்பம் கேட்பதாக 2022.01.05 அன்று, அம்பாறை, கல்முனை பொலிஸ் பிரிவில் உள்ள சாய்ந்தமருது பகுதியை சேர்ந்த தாயார் ஒருவரால் கல்முனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதற்கமைய தலைமறைவாக இருந்த 3 சந்தேக நபர்களையும் பொலிஸார் அடையாளம் கண்ட நிலையில், கடந்த திங்கட்கிழமை (18) மட்டக்களப்பு, ஏறாவூர் பகுதியை சேர்ந்த 33 வயதுடைய நபரை, கல்முனை பகுதி உணவகமொன்றில் வைத்து கைது செய்தனர்.

அதன் பின்னர் கைதானவரின் தகவலுக்கமைய, இச்சம்பவத்துக்கு உடந்தையான செயற்பட்ட மற்றுமொரு சந்தேகநபரான சாய்ந்தமருது பகுதியைச் சேர்ந்த 31 வயது நபரை, அவரது வீட்டில் வைத்து கைது செய்தனர்.

இவ்வாறு கைதான இருவரும் நேற்று முன்தினம் (19) கல்முனை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில், மே 02ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, நீதவான் உத்தரவிட்டடார்.

அதேவேளை, பிரதான சந்தேகநபரான சாய்ந்தமருதைச் சேர்ந்த மற்றுமொரு சந்தேகநபர், டுபாய் நாட்டுக்கு தப்பிச் சென்ற நிலையில், அவரைக் கைது செய்ய பிடியாணை உத்தரவை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மட்டு. குடும்பம் அகதியாக

## தனுஷ்கோடியை சென்றடைந்தது

■ லெம்பர்ட்

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக மட்டக்களப்பைச் சேர்ந்த ஒரு பெண், தனது இரு பிள்ளைகளுடன், தனுஷ்கோடிக்கு அகதியாக நேற்று (20) அதிகாலை சென்றடைந்துள்ளார்.

சிறுமி, நான்கு வயது சிறுவன் உள்ளிட்ட குறித்த மூவரையும் மீட்ட மெரைன் பொலிஸார், தனுஷ்கோடி மெரைன் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து வந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

மட்டக்களப்பில் இருந்து எவ்வாறு தனுஷ்கோடிக்கு சென்றார்கள் என்பது குறித்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



மக்களுக்கு சேவை செய்வதே

# தலையாய கடமை

### அரசியல்வாதிகள் மனதில் கொள்ளவும்

■ லெம்பர்ட்

மக்களுக்கு சேவை செய்வதே எமது தலையாய கடமை என்பதை ஒவ்வோர் அரசியல்வாதியும் அதிகாரிகளும் மனதிற்கொள்ள வேண்டும் என மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

ரம்புக்கனையில் நேற்று முன்தினம் (19) இடம்பெற்ற அசம்பாவித சம்பவம் தொடர்பில் கருத்துத் தெரிவித்துள்ள அவர்,

“தங்களது எதிர்காலத்துக்காகவும் உரிமைகளுக்காகவும் போராடி உயிர்நீத்த இளைஞருக்கும்,



பலத்த காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு உள்ளவர்களுக்கும் எனது ஆழ்ந்த அனுதாபத்தையும் வருத்தத்தையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பொலிஸாரின் இவ்வாறான காட்டுமிராண்டித்தனமான செயற்பாடுகளை நாம் வன்மையாக கண்டிக்கின்றோம். இவை நிறுத்தப்பட வேண்டும். அத்துடன், குறித்த சம்பவத்துடன் சம்பந்தப்பட்ட அனைத்து அதிகாரிகளும் இதற்குப் பொறுப்புக் கூற வேண்டும்.

ஆர்ப்பாட்டத்தை தடுத்து நிறுத்துவதற்கு பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் குறைந்தபட்ச படையணியினாலேயே ஓர் உயிர் காவு கொள்ளப்பட்டிருக்கின்றது என்றால், அதிகபட்ச படைகளை பயன்படுத்தி இருப்பின் என்ன நேர்ந்திருக்கும்?

ஆகையால், மக்களுக்கு சேவை செய்வதே எமது கடமை என்பதை ஒவ்வோர் அரசியல்வாதியும் அதிகாரிகளும் மனதிற்கொள்ள வேண்டும்” என்று கூறினார்.

வயோதிபர்களை தாக்கி

## கொள்ளையிட்ட மூவர் கைது

■ செ.கீதாஞ்சன்

புதுக்குடியிருப்பு, தேவிபுரம் பகுதியில் தனிமையில் வீட்டில் இருந்த வயோதிப தம்பதிகள் மீது 16.04.2022 திகதி வாள்வெட்டு தாக்குதல் மேற்கொண்டு, வயோதிப பெண்ணின் கழுத்தில் இருந்த முக்கால் பவுண் தாலியை கொள்ளையடித்த சம்பவத்துடன் தொடர்புடைய மூவரை, புதுக்குடியிருப்பு பொலிஸார் கைதுசெய்தனர்.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த வயோதிப தம்பதிகள் சிகிச்சை பெற்றுவரும் நிலையில், சம்பவம் தொடர்பில் மோப்பநாய்களின் உதவியுடன் தடையவியல் பொலிஸார், புதுக்குடியிருப்பு பொலிஸார் இணைந்து விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

இதன்படி, கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய இரண்டு இளைஞர்களும் இவ்வாறு கொள்ளையடிக்கும் நகைகளை விற்பனை செய்துவரும் குடும்ப பெண் ஒருவருமே நேற்று முன்தினம் (19) கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போது இவர்கள் ஏற்கெனவே, நகை கொள்ளை ஒன்றுடன் தொடர்புபட்டிருந்தமை தெரியவந்துள்ளது.

கொள்ளையிடப்பட்ட நகைகளும் விசுவமடு மற்றும் புதுக்குடியிருப்பு பகுதிகளில் இருந்து பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

இந்தக் கொள்ளை சம்பவங்களுடன் தொடர்புடைய மேலும் நால்வரை பொலிஸார் தேடிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

தமிழ் மக்கள்

## ஒதுங்கியிருப்பதே காலப் பொருத்தம்

நாட்டில் தற்போது நடைபெற்று வரும் போராட்டங்களை தமிழ் மக்கள் ஒதுங்கியிருந்து வேடிக்கை பார்ப்பதே பொருத்தம் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்தார்.

இந்தப் போராட்டம் சிங்கள மக்களுக்கானது. அத்தோடு, இந்தப் போராட்டத்துக்கு இடையில் பேரம் பேசலுக்கான வாய்ப்புகள் ஏதாவது தமிழ்த் தரப்புக்கு கிடைக்குமாக இருந்தால், அதைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் குறிப்பிட்டுள்ளார். பொருளாதார நெருக்கடியால் தென்னிலங்கையில் முளைத்துள்ள போராட்டங்கள் தொடர்பில் விடுத்துள்ள அறிக்கையிலேயே, அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: பொருளாதார நெருக்கடி தமிழர்களையும் பாதித்திருக்கின்றதுதான். அதை மறுக்க முடியாது. ஆனாலும் இப்போதைய நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு, ஆட்சி அதிகாரத்தில் இருப்பவர்களை சங்கீதக் கதிரை போன்று மாற்றுவதற்கு முயலும் தென்னிலங்கை முற்போக்கு சக்திகளின் பின்புலத்துடன் முன்னெடுக்கப்படும் போராட்டங்களை நாம் ஆதரிப்பது தீர்வாகாது என குறிப்பிடப்பட்டுள்ளது.

பாடசாலைகளில்

## மாணவர் வரவு குறைவு

■ க.அகரன்

நடளாவிய ரீதியில் தொழிற்சங்கங்கள் விடுத்த தொழிற்சங்க போராட்டத்தால் வவுனியாவில் நேற்று (20) பாடசாலைகளுக்கு மாணவர்கள் மிகக் குறைந்த அளவிலேயே வருகை தந்திருந்தனர்.

காலையில் பாடசாலை ஆரம்பமாகும் நேரத்தில் ஒரு சில மாணவர்களே வருகை தந்தமையால் தமது பிள்ளைகளை அழைத்து வந்திருந்த பெற்றோர் மீண்டும் வீடுகளுக்கு பிள்ளைகளை அழைத்து சென்றிருந்தனர்.

இந்நிலையில், வவுனியாவின் பிரபல பாடசாலைகளான வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம், சைவப் பிரகாச மகளிர் கல்லூரி என்பவற்றில் ஆசிரியர்கள், மாணவர்கள் குறைந்தளவில் வருகை தந்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.





## சன நடமாட்டம் குறைந்தது

■ க. அகரன்

நாட்டில் நேற்று (20) தேசிய எதிர்ப்பு தினம் கடைப்பிடிக்கப்பட்ட நிலையில் வவுனியா நகரில் சனநடமாட்டம் மிகவும் குறைந்த நிலையில் காணப்பட்டது.

அத்தியாவசிய பொருட்களின் விலை ஏற்றத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து பல்வேறு பகுதிகளிலும் போராட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

அந்தவகையில் நேற்றையதினம் அரசுக்கு எதிர்ப்பை வெளியிடும் வகையில் தேசிய எதிர்ப்பு தினத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டதுடன், ஹர்த்தாலை அனுஷ்டிக்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், அதற்கு ஆதரவு தெரிவித்து வவுனியா, செட்டிகுளம் உட்பட புறநகர் பகுதிகளில் வியாபார நிலையங்கள் மூடப்பட்டிருந்தன.

அதேவேளை, நேற்றுக் காலை முதல் நகரப்பகுதிக்கு செல்லும் பொதுமக்களின் எண்ணிக்கையும் மிகவும் குறைவாகக் காணப்பட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது.



முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பில்

## கடைகள் அடைப்பு

■ செ.கீதாஞ்சன்

நாடு தழுவிய ரீதியில் நேற்று (20) விடுக்கப்பட்ட தொழில் சங்க போராட்டத்துக்கு முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு வர்த்தக சங்கத்தினரும் கதவடைப்பினை மேற்கொண்டு ஆதரவு தெரிவித்தனர்.

நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்து நகரங்களிலும் மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள நிலையில் தொழிற்சங்கங்கள் மற்றும் மக்களின் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் முகமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு பிரதேச வணிகர்கள் கடைகளை பூட்டி போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்தனர்.



இதேவேளை, முல்லைத்தீவு மாவட்டத்தில் தனியார் போக்குவரத்து சங்கத்தினரும் பஸ்கள் எவையும் சேவையில் ஈடுபடாது போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்துக் மேற்கொண்டனர்.

மக்களின் உரிமைக்காக குரல் கொடுப்பவர்களை

# சுட்டுக் கொல்கிறது

**எம்.பி தெரிவிப்பு**

கணேசன்

ரம்புக்கனையில் மக்களுக்காக குரல் கொடுத்த, மக்களுக்காக போராடிய மக்களின் உரிமைகளுக்காக, களத்தில் இறங்கிய இளைஞர்களை சுட்டுக்கொன்ற அரசாங்கத்தின் செயற்பாடுகளை வன்மையாகக் கண்டிப்பதோடு, அந்தக் குடும்பத்துக்கு மலையக மக்கள் சார்பாக ஆழந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் வேலுசாமி இராதாகிருஷ்ணன் குறிப்பிட்டுள்ளார்.



ரம்புக்கனையில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் வெளியிட்டுள்ள விசேட அறிக்கையிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

ரம்புக்கனை சம்பவமானது, இலங்கையில் மேலும் மனித உரிமைகள் மீறப்படுகின்றன என்பதை சர்வதேசத்திற்கு உணர்த்துவதாக அமைந்துள்ளது. இது மேலும் எங்களுடைய பொருளாதாரத்தை பலவீனப்படுத்தும்; சுற்றுலாத்துறை பாதிக்கப்படும். வெளிநாட்டு முதலீடுகள் இலங்கையில் முதலீட்டப்படமாட்டாது. வெளிநாடுகள் பொருளாதார ரீதியாக எங்களுக்கு உதவி செய்வதை மீண்டும் ஒரு முறை சிந்தித்து பார்க்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும்.

சர்வதேச நாணய நிதியத்திடம் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு இலங்கை குழுவினர் அங்கு சென்று பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருகின்றார்கள். சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரிகள் உங்கள் நாட்டில் மனித உரிமைகள் மீறப்படுகின்றதே என்ற கேள்வியை முன் வைத்தால் இவர்கள் கூறப் போகும் பதில் என்ன?

எனவே இளைஞர்களின் உணர்வுகளைப் புரிந்துக்கொண்டு, அவர்களுடைய எதிர்ப்பார்ப்புகளை புரிந்து கொண்டு அரசாங்கம் செயல்பட வேண்டும். ஜனநாயகத்திற்கு மதிப்பளிக்க வேண்டும்.

கடந்த காலங்களை போல இளைஞர்களுக்கு எதிராக செயல்பட்டு, அவர்களைத் தூண்டிவிட்டு, ஓர் அசாதாரண சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் முயற்சிக்கின்றதா என்ற சந்தேகமும் எழுகிறது.

வீதியில் இறங்கி போராடுகின்ற இளைஞர், யுவதிகள் தங்களுடைய பாதுகாப்பை உறுதி செய்து கொள்ள வேண்டும் எனவும் அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அத்தியாவசிய தேவைகளுக்காக ஒதுக்கப்பட்ட

# எரிபொருள் மக்களுக்கு விநியோகம்

சுமணசிறி குணதிலக

அத்தியாவசிய தேவைக்காக ஒதுக்கப்பட்டிருந்த ஒரு தொகை பெற்றோல், பொலிஸாரால் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது.

பிபிலை, மெதகம சிபெட்கோ எரிபொருள் நிலையத்தில், நேற்று (20) எரிபொருளை பெற்றுக்கொள்ள வந்தவர்களால் எதிர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது பொலிஸார் தலையிட்டு, குறித்த எரிபொருள் நிலையத்தில் அத்தியாவசிய தேவைக்காக ஒதுக்கப்பட்டிருந்த பெற்றோலை, தலா 500 ரூபாய்க்கு பகிர்ந்தளித்துள்ளனர்.



குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மூன்று நாள்களாக எரிபொருளைப் பெற்றுக்கொள்ள மக்கள் வரிசைகளில் காத்திருந்த நிலையிலேயே, பொலிஸார் இந்த நடவடிக்கையை முன்னெடுத்திருந்தனர்.

இரண்டாவது நாளாகவும்

# ஹட்டனில் பஸ்கள் ஓடவில்லை



ரஞ்சித் ராஜபக்ஸ

ஹட்டன் பஸ் தரிப்பிடத்திலிருந்து தினமும் சேவையில் ஈடுபடும் குறுகிய மற்றும் தூர இடங்களுக்கான தனியார் பஸ்கள் நேற்றும்(20) போக்குவரத்து சேவையில் இருந்து விலகியிருக்கின்றன.

டீசல் விலை அதிகரிப்புக்கு ஏற்ப பஸ் கட்டணங்களின் 35 சதவீத அதிகரிப்பு போதமானதாக இல்லை என்றும் எனவே பஸ் கட்டணங்களை 50 சதவீதமாக அதிகரிக்குமாறும் தனியார் பஸ் உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் நுவரெலியா மாவட்டத்திலுள்ள பெரும்பாலான பாடசாலைகளில் இன்றைய தினம் மாணவர்களின் வருகையில் பாரிய வீழ்ச்சி காணப்படுவதாக பாடசாலை அதிபர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை நேற்று (20) ஹட்டன் இ.போ.ச டிப்போ மூலம் அதிகமான பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டாலும் பயணிகளின் எண்ணிக்கை குறைவாகவே உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் மூவர்

என்.ஆராச்சி

ரம்புக்கனை நகரில் நேற்று முன்தினம் (19) மாலை பொலிஸாருக்கும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்களுக்கும் இடையில் இடம்பெற்ற மோதலில், 42 வயதான ஒருவர் உயிரிழந்த நிலையில், காயமடைந்த 13 பொதுமக்களில் மூவர் கேகாலை வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைப் பெற்று வருவதாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன், இச்சம்பவத்தில் காயமடைந்த 14 பொலிஸார், கண்டி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் காயமடைந்த ஏனையவர்கள் கேகாலை மற்றும் ரம்புக்கனை ஆகிய வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி காயமடைந்தவர்களின் நலன் விசாரிப்பதற்காக, ஐக்கிய தேசிய கட்சியின் பிரதி தலைவர் ருவன் விஜேவர்தன, நேற்றுமுன்தினம் இரவு கேகாலை வைத்தியசாலைக்கு விஜயம் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.






## மொனராகலையில் கிளை...

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷவை பதவி விலகுமாறு வலியுறுத்தி, கொழும்பு காலி முகத்திடலில் அமைக்கப்பட்டுள்ள ‘கோட்டா கோ கம’ வுக்கு ஆதரவாக மொனராகலையில் சிவில் அமைப்பினரால் நேற்று (20) ‘கோட்டா கோ கம’ கிளையொன்று அமைக்கப்பட்டுள்ளது. (சுமணசிறி குணதிலக)

இ.தொ.கா

# வன்முறையை எப்போதும் ஆதரிக்காது

பி.கேதீஸ்



இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் வன்முறையை ஒருபோதும் ஆதரித்தது கிடையாது என இ.தொ.காவின் பொது செயலாளரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

ரம்புக்கனையில் பொதுமக்களால் நேற்று முன் தினம் மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகம் தொடர்பில் கருத்து தெரிவித்த போதே, மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மக்களால் ஜனநாயக முறையில் மேற்கொள்ளப்படும் போராட்டங்களின் போது பொலிஸார் வன்முறையை கையில் எடுத்துள்ளமையானது கண்டிக்கத்தக்கது.

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையால் மக்கள் போராட்டங்களில் ஈடுப்பட்டு வருகின்றனர். இந்த துப்பாக்கிச்சூட்டு சம்பவத்திற்கு அரசாங்கமே பொறுப்பு கூற வேண்டியுள்ளது என்றார்.



சர்வதேச ஐக்கிய கலாம் அறக்கட்டளையின்

# முதலாம் ஆண்டு விழா

நீலமேகம் பிரசாந்த்

சர்வதேச ஐக்கிய கலாம் அறக்கட்டளையின் முதலாம் ஆண்டு விழா நவசக்தி இளைஞர் கழகத்தின் ஏற்பாட்டில், டயகம, சௌமியமூர்த்தி தொண்டமான் கல்லூரி மண்டபத்தில் நேற்று முன்தினம் (19) நடைபெற்றது.

இத்தொடக்க விழாவில் இந்திய முக்கியஸ்தர்கள் மற்றும் சர்வதேச ஐக்கிய கலாம் அறக்கட்டளையின் தலைவர் டொக்டர் செந்தூர் பாண்டியன், முன்னிலையில் மலையக கலாசார ஒன்றியத்தின் செயலாளரும், வணிக உலக சர்வதேச அமைப்பின் இலங்கைக்கான இயக்குனருமான ரகு இந்திரகுமார் ஊடாக ஏற்பாடு செய்யப்பட்டு நடைபெற்றது.

இந்நிகழ்வின் போது நூறு குடும்பங்களுக்கான குடும்ப நலத்திட்ட உதவிகளும் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களும் இளைஞர்களுக்கான சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன. தொடர்ந்தும் இவ்வாறான செயற்பாடுகள் மலையகமெங்கும் கலாம் அறக்கட்டளை ஊடாக முன்னெடுக்க ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படுமென ரகு இந்திரகுமார் தெரிவித்திருந்தார்.

மலையகமெங்கும் ஆர்ப்பாட்டக் குரல்கள்

# நேற்றும் ஒலித்தன



மலைய நிருபர்கள்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷ உள்ளடங்கலான அரசாங்கம் பதவி விலக வேண்டும் என வலியுறுத்தி நேற்றும் (20) மலையகமெங்கும் ஆர்ப்பாட்டக் குரல்கள் ஒலித்தன.

குறிப்பாக, நேற்றைய தினம் தோட்டத் தொழிலாளர்களும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.

இதற்கமைய, தலவாக்கலை, லிந்துலை நகர சபைக்கு அருகில் இருந்து ஆர்ப்பாட்ட பேரணியை ஆரம்பித்த போராட்டக்காரர்கள், தலவாக்கலை-ஹட்டன் சுற்றுவட்டத்துக்கு பதாகைகளை ஏந்தி, கோஷங்களை எழுப்பியவாறு வந்தனர். பின்னர் சாலை மறியல் போராட்டத்தையும் முன்னெடுத்தனர். இதனால் பிரதான வழியுடனான போக்குவரத்து ஸ்தம்பிதம் அடைந்தது.



அத்துடன் ஹொலிரூட் தோட்ட தொழிலாளர்களும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பசறை, யூரி தோட்ட மக்கள் பதுளை - பசறை பிரதான வீதியின் ஒரு பகுதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன், வீதியில் டயர்களை எரித்தும் பதாகைகளை ஏந்தியும் கோஷங்களை எழுப்பியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஹட்டன்- பொகவந்தலாவ பிரதான வீதியின் டியன்சின் நகரில், ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்‌ஷவின் உருவ பொம்மையை எரித்து ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கடவளை, கரோலினா, தியகல தோட்டங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் வட்டவளை நகரில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட அதேநேரம், கினிகத்ஹேன நகரிலும் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இராகலை மேல்பிரிவு, இராகலை மத்தியபிரிவு, சின்னஒப்ராசி, இராகலை இரண்டாம் பிரிவு, ஸ்டாபோட் ஆகிய தோட்டங்களை சேர்ந்த தோட்ட தொழிலாளர்கள், இளைஞர்கள், யுவதிகள் இராகலை நகரில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஜனாதிபதியை பதவி விலகுமாறு வலியுறுத்தி, கவரவில ஒல்டன் ஆகிய தோட்டத் தோட்டத்தொழிலாளர்களும் எதிர்ப்பு போராட்டத்தை நேற்று (20) முன்னெடுத்திருந்தனர்.

ஹட்டன் டிப்போவுக்கு ஒரே வாரத்தில்

# ஒரு பில்லியன் ரூபாய் வருமானம்

சுதத்.எச்.எம்.ஹேவா

தமிழ்- சிங்கள புத்தாண்டு வாரத்தில் மாத்திரம், ஹட்டன் இ.போ.ச பஸ் டிப்போவுக்கு ஒரு கோடியே 75 இலட்ச ரூபாய் வருமானம் கிடைத்துள்ளது என டிப்போ அதிகாரி ஜானக கீர்த்திரத்ன தெரிவித்துள்ளார்.

புத்தாண்டு காலப் பகுதியில் வழமைக்கு மேலதிகமாக ஹட்டன்- கொழும்பு, ஹட்டன்- கண்டி மற்றும் தூர, குறுகிய இடங்களுக்கு இ.போ.ச பஸ் சேவைகள் முன்னெடுக்கப்பட்டிருந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கமையவே அதிக வருமானத்தை பெற்றுக்கொள்ள முடிந்ததாகவும் இதற்காக டிப்போ பணியாளர்கள், சாரதிகள், நடத்துநர்கள் பாரிய அர்ப்பணிப்புடன் செயற்பட்டனர் என்றார்.

# படிந்த இரத்தக் கறையைக் கழுவுவது எளிதான காரியமல்ல

அரசியல்வாதிகளில் பெரும்பாலானவர்கள், தங்கள் கைகள் கறைபடியாத கைகள் எனச் சொல்வார்கள். ஆனால், பாராளுமன்றத்தில் நேற்றையதினம் உரையாற்றிய எதிரணி உறுப்பினர்களின் உரைகளில், “ராஜபக்ஷர்களின் கைகள் கறைபடிந்தவை” என பட்டியலிடப்பட்டன.

பெரும்பான்மை உறுப்பினர்கள் தெற்கில் இடம்பெற்ற சம்பவங்கள், உயிர்த்த ஞாயிறு சம்பவங்கள் என்பவற்றைப் பட்டியலிட்டனர். தமிழ்மொழி பேசும் உறுப்பினர்கள், தெற்கு சம்பவங்களை மட்டுமன்றி வடக்கு, கிழக்கில் இடம்பெற்ற இனவழிப்பு, இறுதியுத்தம் ஆகியவற்றை கோடிட்டுக்காட்டி உரையாற்றியிருந்தனர்.

ஆக, நாட்டில் இடம்பெற்ற மிகமுக்கியமான படுகொலைகளில் எல்லாம், ராஜபக்ஷர்களின் கைகளில் கறைகள்படிந்துள்ளன என்பதே, உறுப்பினர்களின் உரைகளின் சாரம்சமாகும்.

தங்களது உரிமைகளுக்கான மக்களின் குரலை, துப்பாக்கி ரவைகள் கொண்டு அடக்க முயற்சிக்கும் சம்பவங்களில் இறுதி சம்பவம், ரம்புக்கனையில் இடம்பெற சம்பவமாக இருக்காது. வடக்கு, கிழக்கை பொறுத்தவரையில், துப்பாக்கி கொண்டு அடக்கும் சம்பவங்கள், அப்பட்டமாகவே அரங்கேற்றப்படுகின்றன.

“எரிபொருள் பவுசருக்கு தீ மூட்ட முயன்றவர்களைக் கலைப்பதற்கே, துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது” என, பொலிஸ் தரப்பு கூறுகின்றது. அந்தத் துப்பாக்கிச் சன்னங்கள் பவுசரில் பட்டிருந்தால், பல ஆயிரம் உயிர்களை இழந்திருக்க வேண்டும். ஆகக்குறைந்த பலமே பயன்படுத்தப்பட்டதென வியாக்கியானம் செய்து, ஏதோவொன்றை மூடி மறைக்க முயற்சிக்கின்றனர்.

ஆகக்குறைந்த பலத்தால், மனிதஉயிர் பறிக்கப்படுமாயின், ஆகக்கூடுதலான பலத்துக்கு அர்த்தம் தேடவேண்டியுள்ளது. சர்வதேச நாடுகள் உள்ளிட்ட அமைப்புகள், இலங்கையின் மீது, தமது கண்களைக் கூர்மைப்படுத்தியிருக்கும் நிலையில், மிகக்கவனமாக முடிவுகளை எடுக்கவேண்டும்.

ரம்புக்கனையில் பயன்படுத்தப்பட்ட ஆகக்குறைந்த பலத்தால், ஒருவர் மரணமடைந்தார். காயமடைந்த 27 பேரில் இருவர் அவசர சிகிச்சைப் பிரிவில் உள்ளனர். இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தை கண்டித்துள்ள எதிர்க்கட்சி மற்றும் அமைப்புகளும் சர்வதேசமும் நியாயமான விசாரணைகளை கோரிநிற்கின்றன.

பொதுமக்களால் கடந்தகாலங்களில் நடத்தப்பட்ட போராட்டங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோக சம்பவங்கள் குறித்து, விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக, சட்டரீதியான நடவடிக்கைகள் முறையாக எடுக்கப்படவில்லை. குற்றஞ்சாட்டப்பட்டவர்கள், சுதந்திரமாகவே இருக்கின்றனர் என்பது யதார்த்தத்தில் காணமுடிகிறது.

ரம்புக்கனை சம்பவம் தொடர்பிலான விசாரணைகளும், அவ்வாறே குப்பைக் கூடைக்குள் சென்றுவிடக்கூடாது. துரிதப்படுத்தி குற்றவாளிக்கு தண்டனை வழங்குவதே படிப்பினையாக இருக்கும். பொதுமக்களின் போராட்டங்களின் மீது, துப்பாக்கி பிரயோகம் செய்ய எத்தனிப்போர், அந்தத் தீய சிந்தனையை விட்டுவிடுவர்.

மனித உயிரைப் பறிப்பதற்கு யாருக்கும் உரிமையில்லை. தங்களுடைய உரிமைகளை வென்றெடுப்பதற்காகப் போராடும் உரிமை ஒவ்வொருவருக்கும் உள்ளது என்பதை, இனியாவது நினைவில் கொள்ளவேண்டும். படிந்த இரத்தக் கறையைக் கழுவவே முடியாது என்பதை நினைவில் கொண்டு, நீதியான விசாரணைகளை நடத்தி, பாதிக்கப்பட்டோருக்கு நியாயம் பெற்றுக்கொடுக்க வேண்டுமென நாம் வலியுறுத்துகின்றோம்.

தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

துன்பங்கள், நீண்ட காலம் தொடர்வதுபோல்த் தெரியும். இது ஒரு சொற்ப காலமே என எண்ணி, அந்த நிலையில், வேறு நல்ல விடயங்களுடன் இருந்திடப் பழகுங்கள்.

நல்ல நேரம் வந்து சந்தோஷமாக இருக்கும்போது, பழைய கதைகளை உருவேற்றிக் கலங்கக் கூடாது. ஆனால், துன்பமான வாழ்க்கையில்த்தான் அனுபவங்கள் உருவாகி, எழுச்சியைக் காண்கிறீர்கள்.

நீங்கள் நல்ல நிலைக்கு வந்த பின்னர், உங்களைப் போல் துன்பத்தில் வாழ்பவர்களுக்கு ஆறுதல் அளிப்பதுடன், உதவிகளையும் செய்க! ஒருவரை ஆறுதல் படுத்துதலே, அவர்களுக்கான பெரும் உதவியாகும். அரவணைக்கும் பண்பில், மனித நாகரிகம் பிணைந்துள்ளது.

மானிட நேயம் வளர்ந்திட, சமூக ஒத்துழைப்பு அவசியமாகும். பக்தி உணர்வு, இரக்கத்தை உண்டாக்க வல்லது. சமயத் தலைவர்கள், பொதுநல சேவையாளர்கள் மக்களின் பணிகளில் தீவிரமாக இயங்க வேண்டும். இன்று மக்கள் நெருக்கடியுடன் வாழும் காலம். நேர்மையான எண்ணங்களை அனைவருக்கும் ஊட்டுவதே எமக்கான பணியாகும்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

# ராஜபக்ஷர்களுக்கு எதிரான போராட்டங்களில் தமிழ் மக்களின் பங்கு?



புருஜோத்தமன் தங்கமயில்

தமிழ்ப் பரப்பிலுள்ள சில தரப்புகளால், “..ராஜபக்ஷர்களை வீட்டுக்கு அனுப்பும் போராட்டம், தென் இலங்கை மக்களின் வயிற்றுப் பசிக்கான பிரச்சினை. அதில் பங்களிப்பது அவசியமற்றது. தமிழ் மக்கள் ஒதுங்கியிருந்து, வேடிக்கை பார்க்க வேண்டும்....” என்கிற கருத்துருவாக்கம், தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுகின்றது. குறிப்பாக, புலம்பெயர் தமிழ் மக்களில் ஒரு தொகுதியினர் அதைத் தலையாய பணியாக ஏற்றும் செயற்படுகின்றனர்.

நாட்டில் அத்தியாவசியப் பொருட்களுக்கான தட்டுப்பாடு தலைவிரித்தாடுகின்றது. சமையல் எரிவாயு தொடங்கி, எரிபொருட்களைப் பெற்றுக் கொள்வது என்பது குதிரைக் கொம்பாகிவிட்டது.

தங்களது நாளாந்த வேலைகளை விட்டுவிட்டு, நாள்கணக்கில் அத்தியாவசிய தேவைகளுக்காக வரிசையில் நிற்பதே, மக்களின் வாடிக்கையாகிவிட்டது. இந்த நெருக்கடி, தென் இலங்கை மக்களுக்கு மாத்திரமானதல்ல; அது முழு நாட்டுக்குமானது.

தென் இலங்கை மக்கள்தான், ராஜபக்ஷர்களை ஏகோபித்த பெரும்பான்மையோடு ஆட்சிக்கு கொண்டு வந்தார்கள். ஆகவே, அவர்கள் தற்போது சந்தித்து நிற்கும் நெருக்கடி, தேவையான ஒன்றுதான் என்ற மாதிரியான எண்ணப்பாடுகளையும், சில தமிழ்த் தரப்புகள் கொண்டாட்ட மனநிலையோடு பகர்ந்து வருகின்றன.

அவர்களுக்கு, தமிழ் மக்கள் ராஜபக்ஷர்களை வீட்டுக்கு அனுப்பும் கோரிக்கைகளைவிடுப்பதோ, போராடுவதோ எரிச்சலூட்டுகின்றது. அவர்கள், அற்ப சந்தோஷங்களின் வழியாக, வாழ்க்கையைக் கொண்டு நகர்த்திவிட நினைக்கிறார்கள்.

மாறாக, தாயகத்திலுள்ள தமிழ் மக்களின் பொருளாதாரப் பிரச்சினைகள் பற்றியோ, அரசியல் நகர்வுகள் பற்றியோ எந்தவித புரிதலும் இல்லை. “தமிழ் மக்கள், முள்ளிவாய்க்காலில் சந்திந்த பிரச்சினைகளோடு ஒப்பிடுகையில், இன்றைய பொருளாதார நெருக்கடி எல்லாம் ஒன்றுமேயில்லை” என்கிற வகையான வாதங்களை, எந்தவித ‘கூச்சநாச்சம்’ இன்றி முன்வைத்து வருகின்றனர்.

இலங்கை ரூபாயின் பெறுமதி, கடந்த இரண்டு மாதங்களில் 48 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்து இருக்கின்றது. கிட்டத்தட்ட அரைவாசியாகப் பெறுமதி இழப்பு ஏற்பட்டிருக்கின்றது. இந்தப் பெறுமதி இழப்புக்கு ஏற்ப, வருமான அதிகரிப்பு என்பது, இலங்கையில் எந்தவொரு தொழிற்றுறையிலும் சாத்தியமில்லை.

இப்படியான நிலையில், இந்த நெருக்கடி நிலை ஒரு சில நாள்களிலோ மாதங்களிலோ முடிந்து போகப்போவதில்லை. சில ஆண்டுகளுக்கு இதுவே வாழ்க்கையாகிவிடும். அப்படியான நிலையில், நெருக்கடி நிலையை ஏற்படுத்தியதில் பெரும்பங்காற்றிய ராஜபக்ஷர்களுக்கு எதிராகப் போராடுவது என்பது தவிர்க்க முடியாதது.

அதுபோல, எதிர்காலத்தில் ஆட்சிக்கு வரும் தரப்புகள், ஊழல் மோசடிகள் இன்றி செயற்படுவதற்கான எச்சரிக்கையை விடுக்கும் வகையிலும் தற்போதைய போராட்டங்கள் அவசியமானவை.

முள்ளிவாய்க்கால் கொடூரங்களைச் சந்தித்துவிட்டு வந்த மக்களில் 95 சதவீதமானவர்கள் இன்னமும் தாயகத்திலேயே இருக்கிறார்கள். இவர்களின் பொருளாதாரம் என்பது, இன்னமும் சரி செய்யப்படவில்லை. மாறாக, வறுமைக்கோட்டுக்குக் கீழான வாழ்க்கையோடு அல்லல்படுபவர்கள்தான் அதிகமானவர்கள்.

இவர்களுக்கு, இன்றைக்கு நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற பொருளாதார நெருக்கடி என்பது இன்னும் பயங்கரமானது. இவர்கள் முள்ளிவாய்க்காலை சந்தித்த அனுபவங்களைக் கொண்டவர்கள்; எனவே, இதையும் சகித்துக் கொள்வார்கள் என்கிற அணுகுமுறையானது, அயோக்கியத்தனமானது. நெருக்கடியைச் சந்தித்த மக்கள், வாழ்க்கை பூராவும் அப்படியே இருந்துவிட வேண்டும் என்கிற தோரணையிலானது.

வடக்கு, கிழக்கில் போரால் அதிகம் பாதிக்கப்பட்ட மக்கள் இன்னமும் விவசாயத்தையும் மீன்பிடியையும் பிரதான தொழிலாகக் கொண்டவர்கள். ராஜபக்ஷர்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்தது முதல், விவசாய முன்னெடுப்புகள் படுத்துவிட்டன.

உரத்துக்கான தட்டுப்பாட்டை, திட்டமிட்ட ரீதியில் ராஜபக்ஷர்கள் ஏற்படுத்தினார்கள். அத்தோடு, அசேதன உரத்துக்கு மாற்றாக, சேதன உரம் என்கிற திட்டத்தை ஒரே நாள் இரவில் அமல்படுத்தினார்கள். இதனால், ஏக்கர் கணக்கான வயல்வெளிகள் காய்ந்து வறண்டன. பெரும் நட்டத்தோடு விவசாயிகள் அல்லாட வேண்டி வந்தது.

ராஜபக்ஷர்கள் மீண்டும் ஆட்சிக்கு வருவதற்கு முன்னர், 3,000 ரூபாய்க்கு விற்கப்பட்ட உரத்தின் விலை, தற்போது 30,000 ரூபாயைத் தாண்டி விட்டது. அத்தோடு டீசலையோ, மண்ணெண்ணையையோ விவசாயிகளால் பெற்றுக் கொள்ள முடியவில்லை. நீரிறைக்கும் இயந்திரங்கள் தொடங்கி, உழவு இயந்திரங்கள் வரையில் ஒன்றையும் இயக்க முடியாது, வயல்களையும் தோட்டங்களையும் அப்படியே காயவிட்டு கண்ணீர் வடிக்கும் நிலை ஏற்பட்டிருக்கின்றது.

அதுபோல, எரிபொருள் தட்டுப்பாட்டால் வடக்கு, கிழக்கு உள்ளிட்ட நாடு பூராவுமுள்ள மீனவர்களின் தொழில் நடவடிக்கைகள் முழுவதுமாக முடங்கி விட்டன. ஆயுதப் போர் நீடித்த மூன்று தசாப்த காலத்தில் வடக்கு, கிழக்கு மீனவர்கள் தங்களது தொழில் நடவடிக்கைகளை முழுவதுமாக இழந்திருந்தனர். போரின் முடிவுக்குப் பின்னரும் கூட, எல்லை தாண்டும் இந்திய மீனவர்களாலும், தென் இலங்கை மீனவர்களின் அச்சுறுத்தல்களாலும் தொழில் நடவடிக்கைளை முன்னெடுப்பதில் இடர்பாடுகளையே சந்தித்து நிற்கின்றார்கள்.

இப்படியான நிலையில், இன்றைக்கு எரிபொருள் தட்டுப்பாட்டால் வடக்கு, கிழக்கிலுள்ள மீனவர்கள், தொழில் நடவடிக்கையை முன்னெடுக்க முடியாது திணறுகிறார்கள். படகுகளைத் தரையில் ஏற்றிவிட்டு, போர்க் காலத்தில் கட்டுமரத்தில் கரையோர மீன்பிடியில் ஈடுபட்டது போல, மீண்டும் கட்டுமரங்களைக் கட்டும் நிலைக்குத் தள்ளப்பட்டு இருக்கிறார்கள். கட்டுமரங்களைக் கட்டி, தொழில் நடவடிக்கையில் ஈடுபடுவது என்பது, இன்றைய நிலையில், ஒருவேளை உணவுக்கான பணத் தேவைகளைக் கூட பூர்த்தி செய்ய முடியாது.

இன்னொரு பக்கம், அரச ஊழியர்களின் வாழ்வும் இருண்டே கிடக்கின்றது. கடந்த காலங்களில், ஆயிரம் ரூபாய்க்கு வாங்கிய ஒரு பொருளை, தற்போது இரண்டாயிரம் ரூபாய் கொடுத்து வாங்க வேண்டியிருக்கின்றது. அப்படியான நிலையில், நாற்பதாயிரம் ரூபாய் அளவில் ஊதியம் பெறும் அரச ஊழியரையும், அவரில் தங்கி வாழும் குடும்பத்தினதும் நிலை, எவ்வளவு நெருக்கடியானது என்பதை உணர்ந்து கொள்வது, அவ்வளவு ஒன்றும் சிக்கலானது இல்லை.

இலங்கையின் இன்றைய பொருளாதார நெருக்கடியில் ஆதாயம் அடையும் தரப்புகளாக பதுக்கல் வியாபார முதலைகள், கடத்தல்காரர்கள், வெளிநாட்டிலிருந்து வரும் பணத்தில் வயிறு வளர்ப்பவர்கள் போன்றோரை, வேண்டுமானால் இந்த நெருக்கடி பாதிக்காமல் இருக்கலாம். அவர்களுக்கு இவ்வாறான நெருக்கடி நிலை, நீடிப்பு அவசியமான ஒன்றும் கூட! அதுதான் அவர்களின் கறுப்புச் சந்தையை இன்னும் இன்னும் விரிவுபடுத்த உதவும்.

வயிற்றுப் பசி அனைவருக்கும் பொதுவானது. அது தமிழர்கள், சிங்களவர்கள், முஸ்லிம்கள் என்று வேறுபடுவதில்லை. அதுபோல, இன்றைய பொருளாதார நெருக்கடி என்பது, இலங்கையின் மேற்றட்டு வர்க்கத்தைத் தாண்டி, அனைத்து மக்களுக்கும் பொதுவானது. அப்படியான நிலையில், அந்த நெருக்கடிக்கு எதிராகப் போராடுவது என்பது இயல்பானது.

அதுவும், தொடர்ச்சியாகப் போராட்ட வழியாக வந்த தமிழ் மக்களுக்கு, அது புதிதானதும் இல்லை. அத்தோடு, ராஜபக்ஷர்களை தோற்கடிக்க வேண்டும் என்கிற நிலைப்பாட்டிலேயே தமிழ் மக்கள் தொடர்ந்தும் இருந்து வந்திருக்கிறார்கள். அப்படியான நிலையில், ராஜபக்ஷர்களுக்கு எதிராக, தமிழ் மக்கள் போராடுவதை எள்ளி நகையாட முனைவது சிறுபிள்ளைத்தனமானது.

இன்னொரு பக்கத்தில், ராஜபக்ஷர்கள் தங்களுக்கு எதிராக தென் இலங்கையின் எழுச்சியை சமாளிப்பதற்காக, 20ஆவது திருத்தச் சட்டத்தை மீளப்பெற்று 19ஆவது திருத்தத்துக்குத் திரும்புவது பற்றி சிந்திக்கத் தொடங்கியிருக்கிறார்கள். அதன் மூலம் ஜனாதிபதியின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டு, அது பாராளுமன்றத்தோடு பகிரப்படும்.

அது, தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளுக்கான கட்டங்களில், சில நல்ல முன்னேற்றங்களை ஏற்படுத்தும் வாய்ப்புகளை உருவாக்கும். குறிப்பாக, இனவாத தரப்புகளை மேலெழாதவாறு பார்த்துக் கொள்ளும் நிலை, ஓரளவுக்கு ஏற்பட்டால் கூட, புதிய அரசியலமைப்பு ஊடாக, சில அடைவுகளை நோக்கி நகரலாம். ராஜபக்ஷர்கள் இன்றைக்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் சந்தித்து நிற்கும் நெருக்கடி நிலை அதற்கு உதவலாம். அப்படியான நிலையில், ராஜபக்ஷர்களுக்கு எதிரான போராட்டத்தில், தமிழ் மக்கள் நீடித்திருப்பது தவிர்க்க முடியாதது; அவசியமானதும் கூட!

## கடிதங்கள்

### பொறுப்பற்ற விதமாக செயற்படும் அதிகாரிகள்

குடிவரவு - குடியகல்வு திணைக்களத்தின் வவுனியா பிராந்திய காரியாலயத்துக்கு முன்னால், கடவுச்சீட்டு பெறுவதற்காக மக்கள் ஐந்து மணித்தியாலத்துக்கு மேலாக, வீதியில் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும், அதிகாரிகள் பொறுப்பற்ற விதமாக செயற்படுவதாகவும் மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

வவுனியா, உள்வட்ட வீதியில் வடமாகாணத்துக்கான குடிவரவு - குடியகல்வு திணைக்களத்தின் பிராந்திய அலுவலகம் அமைந்துள்ளது. குறித்த அலுவலகத்தில், புதிதாக கடவுச்சீட்டை பெறுதல், கடவுச்சீட்டை புதுப்பித்தல் உள்ளிட்ட தேவைகளுக்காக காலை ஆறு மணிக்கு முன்பிருந்தே மக்கள் காத்திருக்கின்றனர்.

காலை 8.30 இற்கு பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் சுமார் 50 பேர் வரையில் அலுவலக வளாகத்துக்குள் அனுமதித்து விட்டு, ஏனையவர்களை வீதியில் நிற்க வைக்கின்றனர். தினமும் சுமார் 300 இற்கும் மேற்பட்டவர்கள், காலையில் இருந்து வீதியில் காத்து நிற்கின்ற போதும், அதிகாரிகள் மக்களுக்குப் பொறுப்புக்கூறாமல், தமது கடமையைத் தட்டிக்கழிப்பதாக மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

அத்துடன், ஒரு மணியுடன் “இனி உள்ளே எடுக்க முடியாது” எனக் கூறி, திருப்பி அனுப்பப்படுவதால், சிலர் மூன்று தினங்களாக அலைவதாகவும் என பாதிக்கப்பட்டோர் தெரிவித்தனர். எனவே, மக்களின் நலன்கருதி பணியாற்றுமாறு, பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

க. அகரன்





இந்தூர்

லிவ்–இன் ரிலேஷன்ஷிப்

# காம நடத்தையை ஊக்குவிக்கிறது

அரசியலமைப்புச் சட்டத்தின் 21வது பிரிவின் கீழ் வழங்கப்பட்ட திருமணம் செய்து கொள்ளாமல் சேர்ந்து வாழும் (லிவ்-இன் ரிலேஷன்ஷிப்) உரிமை, பாலியல் குற்றங்கள் மற்றும் விபசாரம் அதிகரிப்பதற்கு வழிவகுக்கிறது என்று மத்திய பிரதேச உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது.

25 வயது பெண் ஒருவரின் பாலியல் பலாத்கார புகார் தொடர்பான மனு ஒன்றின் விசாரணையின் போது, மத்திய பிரதேச உச்சநீதிமன்றத்தின் இந்தூர் பெஞ்சின் நீதிபதி சுபோத் அபியங்கர் கூறியதாவது:

சமீப காலங்களில் திருமணம் செய்து கொள்ளாமல் சேர்ந்து வாழும் உறவுகளால், பாலியல் குற்றங்கள் அதிகரித்து வருவதைக் கவனத்தில் கொள்ளும்போது, லிவ்-இன்-ரிலேஷன்ஷிப் தடை செய்யலாம் என்பதை இந்த நீதிமன்றம் கவனிக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளது.

இந்த உறவு முறை, இந்திய சமூகத்தின் நெறிமுறைகளை மூழ்கடித்து, காம நடத்தையை ஊக்குவிக்கிறது. மேலும் பாலியல் குற்றங்களுக்கு வழிவகுக்கிறது.

புகார் அளித்த பெண் இரண்டு முறைக்கு மேல் கர்ப்பமாகிவிட்டதாகவும், அழுத்தத்தின் கீழ் கருவைக் கலைத்ததாகவும் ஆவணங்கள் வெளிப்படுத்தியுள்ளன.

அவர்களின் உறவு முறிந்தபோது, அந்தப் பெண் வேறு ஒருவரை நிச்சயதார்த்தம் செய்து கொண்டார். ஆனால் பெண்ணுடன் வாழந்தவர் அந்த பெண்ணை அச்சுறுத்தும் முயற்சியில் ஈடுபட்டு உள்ளார் என நீதிபதி சுட்டிக்காட்டினார்.



சென்னை,

## முகக்கவசம் கட்டாயம்

பொது இடங்களுக்கு செல்லும் மக்கள், கட்டாயம் முகக்கவசம் அணிய வேண்டும் என சுகாதாரத்துறை அமைச்சர் மா சுப்பிரமணியன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நாடு முழுவதும் கொரோனா தொற்று அதிகரித்து வருவதாகவும், ஆனால் தமிழகத்தில் பதற்றமான சூழல் இல்லை என்றும் தெரிவித்தார். தமிழகத்தில் முகக் கவசம் அணியாவிட்டால் அபராதம் என்ற முறையே விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்த அவர், பொது இடங்களுக்கு செல்லும்போது கட்டாயம் முகக்கவசம் அணிய வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

புதுடெல்லி

## போரிஸ் வருகிறார்

இங்கிலாந்து பிரதமர் போரிஸ் ஜோன்சன் இரண்டு நாள் பயணமாக புதுடெல்லிக்கு இன்று (21) வருகைதரவுள்ளார். இங்கிலாந்து பிரதமராக பொறுப்பேற்ற பின்னர் போரிஸ் ஜோன்சன் இந்தியா வருவது இதுவே முதல்முறையாகும்.

அவர், இந்தியப் பிரதமர் மோடியை சந்தித்து இருதரப்பு வர்த்தகம், பாதுகாப்புத்துறையில் ஒத்துழைப்பை அதிகரிப்பது உட்பட முக்கிய விவகாரங்கள் குறித்து ஆலோசிக்க உள்ளார். இரு நாடுகளுக்கும் இடையே தடையில்லா வர்த்தக ஒப்பந்தமும் கையெழுத்தாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.



சென்னை:

## கர்நாடகாவிலும் ஹிந்தி திணிப்புக்கு எதிர்ப்பு



தமிழகத்தில் மட்டுமல்ல, கர்நாடகாவிலும் மறைமுக ஹிந்தி திணிப்புக்கு எதிர்ப்பு இருக்கிறது என்று திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி கரூரில் தெரிவித்தார்.

திராவிடர் கழக நீட் எதிர்ப்பு பரப்புரைப் பயணத்தின் 16 ஆம் நாள் பொதுக்கூட்டம் கரூரில் நடைபெற்றது.

அதற்கு முன்னர் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவித்த அவர், “நீட்தேர்வை தமிழகத்தின்மீது திணிப்பதால் மருத்துவக் கனவோடு உள்ள ஏராளமான மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

20க்கும் மேற்பட்ட மாணவர்கள் தற்கொலை செய்துகொண்டுள்ளனர். அரசியலமைப்புச் சட்டத்தின்படி, இது மாநில உரிமைகளைப் பறிக்கும் செயலாகும். புதிய கல்விக்கொள்கையை ‘படிப்பு தடுப்பு கல்விச்சட்டம்’ ஆகும். புதிய கல்விக்கொள்கை என்பது ராஜாஜியின் பழைய குலக்கல்வி திட்டம்தான். கர்நாடகாவிலும் மறைமுகமாக ஹிந்தி திணிக்கப்படுகிறது. அதற்கு கடும் எதிர்ப்புத் தெரிவிக்கப்படுகின்றது” என்றார்.

கேரளா

## மாலை அணிவிக்கும் முன் மணமகள் அறைக்குள் ஓட்டம்

கேரள மாநிலம் கொல்லம் அருகே மண்துருத்தி பகுதியை சேர்ந்த வாலிபர் ஒருவருக்கும் கல்லுநாகம் பகுதியைச் சேர்ந்த பெண்ணுக்கும் குடும்பத்தினரால் திருமணம் நிச்சயிக்கப்பட்டது. திருமணத்துக்கான ஏற்பாடுகளும் நடந்து வந்தன.

முகூர்த்தம் வந்ததும் மணப்பெண் அலங்காரம் செய்யப்பட்டு மணமேடைக்கு அழைத்து வரப்பட்டார். மாப்பிள்ளையும் மாலையை எடுத்து மணமகளுக்கு அணிவிக்க போனார். அப்போது, தடுத்து நிறுத்திய மணப்பெண், மணமேடையில் இருந்து கீழே இறங்கி ஓடிவிட்டார்.

மணமகள் அறைக்குள் ஓடிச்சென்ற மணப்பெண், கதவை உள்ளே பூட்டிக்கொண்டார். என்ன செய்வதென்று தெரியாத நிலையில், இதுதொடர்பில் பொலிஸாருக்கு தகவல் கொடுத்தனர்.



விரைந்துவந்து பெண்ணை மீட்ட பொலிஸார், விசாரித்ததில், காதல் விவகாரம் அம்பலமானது. எனினும், பெற்றோரின் கட்டாயத்தில் திருமணத்துக்கு சம்மதித்தாக கூறியுள்ளார்.

மணமகன் வீட்டாருக்கு நஷ்டஈடு கொடுக்க ஒப்புக் கொண்டதையடுத்து, அனைவரும் சென்றுவிட்டனர். மணமேடை வரை அழைத்து வந்து இப்படியெல்லாம் அசிங்கப்படுத்த கூடாது என்று பொலிஸார் மணப்பெண்ணுக்கு அறிவுரை கூறி அனுப்பிவைத்தனர்.

சென்னை


90 சதவீத பொலிஸ் அதிகாரிகள் ஊழல்வாதிகள்:

## கருத்தை நீக்க உத்தரவு

பொலிஸ்துறையில் 90 சதவீத அதிகாரிகள் ஊழல்வாதிகளாக உள்ளதாக தனி நீதிபதி தெரிவித்த கருத்துகளை நீக்கி, சென்னை உயர்நீதிமன்ற இரு நீதிபதிகள் அமர்வு உத்தரவிட்டுள்ளது.

நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த வசந்தி என்பவர், நில விற்பனை தொடர்பாக நடேசன், ராஜவேலு ஆகியோர் மீது மாவட்டக் பொலிஸில் குற்றப்பிரிவில் புகார் அளித்தார்.

இதனை விசாரித்த பொலிஸார், தவறான புகார் என புகாரை முடித்து, நாமக்கல் நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்தனர். இந்தச் சம்பவம் தொடர்பான நீதிமன்ற அவமதிப்பு வழக்கை விசாரித்து



முடித்துவைத்த சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி வேல்முருகன், தற்போது பொலிஸ் துறையில் 90 சதவீத அதிகாரிகள் ஊழல்வாதிகளாகவும், திறமையற்றவர்களாகவும் உள்ளனர். வெறும் 10 சதவீத அதிகாரிகள் மட்டுமே நேர்மையானவர்களாக, திறமையானவர்களாக உள்ளதாக குறிப்பிட்டிருந்தார்.

தனி நீதிபதியின் இந்தக் கருத்துகளை நீக்கக்கோரி, தமிழக டிஜிபி சைலேந்திரபாபு சார்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டது.

உச்ச நீதிமன்ற உத்தரவுப்படி பிரதிவாதிகளாக இல்லாதவர்கள் பற்றிய கருத்துகளை தெரிவிக்க கூடாது. மேலும் உச்சநீதிமன்றம் உயர் நீதிமன்றங்களுக்கு வழங்கியுள்ள ஆலோசனையில் வழக்கிற்கு அப்பாற்பட்டு, கருத்துகளை தெரிவிக்க கூடாது என்று அறிவுறுத்தியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார். இந்த வாதத்தை ஏற்றுக்கொண்ட நீதிபதிகள் தனி நீதிபதியின் கருத்துக்களை நீக்கம் செய்து உத்தரவிட்டனர்.

# சர்வதேசம் கடும் கண்டனம்

## சவாலான காலமாகும்




ரம்புக்கனையில் பதிவாகிய உயிரிழப்பை ஏற்றுக்கொள்ள முடியாது. எந்தவொரு தரப்பினர் மீதான வன்முறையும் கண்டிக்கத்தக்கது. தற்போதைய நெருக்கடிகளுக்குத் தீர்வுகாண, அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். சுதந்திரமாக ஒன்றுகூடும் உரிமை மற்றும் கருத்து சுதந்திரம் உட்பட அனைத்து மக்களினதும் ஜனநாயக உரிமைகளையும் பாதுகாக்குமாறு வலியுறுத்துவதாகவும், இது இலங்கை மக்களுக்கு சவாலான காலமாக உள்ளது. நிலைமையை தொடர்ந்தும் உன்னிப்பாக அவதானித்து வருவதாக ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

## கட்டுப்பாட்டை கடைப்பிடிக்கவும்

ரம்புக்கனையில் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் ஒருவர் உயிரிழந்துள்ளமை மற்றும் பத்திற்கும் அதிகமானவர்கள் காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்ற செய்தியானது கவலையளிக்கின்றது. எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கட்டுப்பாட்டை அதிகாரிகள் கடைப்பிடிக்க வேண்டும் என்பதுடன் தேவைக்கு அதிகமான பலத்தைப் பயன்படுத்தக்கூடாது. அவர்கள் எதிர்கொள்ளக்கூடிய எந்தவோர் எதிர்ப்பு செயற்பாட்டுக்கும் பதிலளிக்கும் வகையில் சட்டத்திற்கு அப்பாற்பட்ட அதிக அதிகாரத்தைப் பயன்படுத்தக்கூடாது. பாரபட்சமற்ற மற்றும் பயனுள்ள உடனடி விசாரணை அவசியம் என சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.

## உரிமைகளைத் தடுக்கிறது




ரம்புக்கனையில் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து ஆழ்ந்த கவலையளிக்கின்றது. எந்தவொரு தரப்பினரின் வன்முறையும், அமைதியான போராட்டக்காரர்களின் உரிமைகளைத் தடுக்கிறது. மக்களைப் பாதுகாப்பதற்கும், அடிப்படை சுதந்திரத்தைப் பயன்படுத்துவதற்கான அவர்களின் உரிமையைப் பாதுகாப்பதற்கும் தேவையான குறைந்தபட்ச அதிகாரத்தைப் பயன்படுத்தி, போராட்டங்களைக் கட்டுப்படுத்துவது இன்றியமையாதது என ஐ.நா சபையின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி ஹனா சிங்கர் ஹம்டி தெரிவித்துள்ளார்.

## வெளிப்படையான விசாரணை அவசியம்

ரம்புக்கனையில் இருந்து வெளியாகும் பயங்கரமான செய்தியால், நான் மிகவும் வருத்தமடைந்துள்ளேன். அதேபோல், சகலவிதமான வன்முறைகளையும் நான் கண்டிக்கிறேன். ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு எதிராகவோ அல்லது பொலிஸாருக்கு எதிராகவோ அனைத்து தரப்பிலிருந்தும் கட்டுப்பாடு மற்றும் அமைதியைக் கோருகிறேன். முழுமையானதும் வெளிப்படையானதுமான விசாரணை அவசியம் என்பதோடு அமைதியான போராட்டத்திற்கான மக்களின் உரிமை நிலைநாட்டப்பட வேண்டும் எனவும் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.



## உரிமை பாதுகாக்கப்பட வேண்டும்



ரம்புக்கனையில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் உயிரிழப்பு ஏற்பட்டதை அறிந்து நான் மிகவும் வருத்தமடைந்தேன். இது தொடர்பில் சுதந்திரமான மற்றும் வெளிப்படையான விசாரணை அவசியம். அதேபோல் சகல விதமான வன்முறையையும் நான் கண்டிப்பதுடன் இவற்றை கட்டுப்பாட்டிற்கு உட்படுத்த அழைப்பு விடுக்கிறேன். அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும் உரிமை பாதுகாக்கப்பட வேண்டும் என இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் சாரா ஹல்டன் தெரிவித்துள்ளார்.

## பொறுப்புக்கூற வேண்டும்

ரம்புக்கனையில் உயிரிழந்தவர் மற்றும் காயமடைந்தவர்கள் பற்றி கேள்விப்பட்டதில் ஆழ்ந்த வருத்தமளிக்கின்றது. அவர்களின் குடும்பங்களை நோக்கியே எனது எண்ணங்கள் செல்கின்றன. அதிகபட்ச கட்டுப்பாடு அவசரமாக தேவைப்படுகிறது. அதேபோல் வன்முறையைத் தூண்டுபவர்கள் பொறுப்புக்கூற வேண்டும் என கனேடிய உயர்ஸ்தானிகர் டேவிட் மெக்கின்னன் தெரிவித்துள்ளார்.





# பாடசாலையில் குண்டுத் தாக்குதல்

## 6 பேர் மரணம்

ஆப்கானிஸ்தானின் மேற்குக் காபுல் பகுதியில் உள்ள பாடசாலையொன்றில் பயங்கரவாதிகள் நடத்திய குண்டுத் தாக்குதலில் 6 பேர் உயிரிழந்துள்ளனர்.

நேற்று முன்தினம் (19) இடம்பெற்ற இத்தாக்குதலில் குறித்த பாடசாலையின் மீது 3 குண்டுகள் வீசப்பட்டன எனவும், இதில் மாணவர்கள் பலர் படுகாயங்களுக்குள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் தாக்குதலுக்கு இதுவரையிலும் எந்த அமைப்பினரும் பொறுப்பேற்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஷியா பிரிவு முஸ்லிம் மக்கள் வசித்து வரும் குறித்த பகுதியில், சன்னி பிரிவு கிளர்ச்சியாளர்களோ அல்லது ஐ.எஸ் பயங்கரவாதிகளோ இத்தாக்குதலை நடத்தியிருக்கலாம் எனக் கருதப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## செல்லப் பிராணிகளை கொலை செய்யும் சீனர்கள்



சீனாவில் கடந்த சில மாதங்களாகக் கொரோனாத் தொற்றுப் பரவலானது தீவிரமடைந்து வருகின்றது.

குறிப்பாக, சீனாவின் பொருளாதார மையமாகத் திகழும் ஷாங்காயில் ஏறத்தாழ 2 கோடியே 60 லட்சம் பேர் கடும் கொரோனாத் கட்டுப்பாடுகளால் தவித்து வருகின்றனர்.

இந்நிலையில் வைத்தியசாலைகளில் அதிகரித்துள்ள நோயாளர்களின் எண்ணிக்கை காரணமாக, பொதுமக்களின் வீடுகளை சிகிச்சை அளிக்கும் மையங்களாக மாற்ற அரசு முடிவெடுத்துள்ளதாகவும் இதற்காக ஷாங்காய் நகரில் வசிக்கும் மக்களிடம் அவர்களது வீடுகளை ஒப்படைக்குமாறு அரசு உத்தரவிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு அப்பகுதி மக்கள் கடும் எதிர்ப்பினைத் தெரிவித்து வரும் நிலையில், தற்போது கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் செல்லப்பிராணிகளைக் கைப்பற்றும் சுகாதார பணியாளர்கள் அவற்றை கொடூரமாக அடித்துக் கொலைசெய்வதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## பிரித்தானியா

## அமீர் கானிடம் துப்பாக்கி முனையில் கொள்ளை

பிரபல குத்துச்சண்டை வீரரிடம் துப்பாக்கி முனையில் கொள்ளையிடப்பட்ட சம்பவம் லண்டனில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பிரித்தானியாவைச் சேர்ந்த பிரபல குத்துச்சண்டை வீரரான அமீர்கானிடமே மர்ம நபர்கள் துப்பாக்கி முனையில் கொள்ளையடித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இது குறித்து அமீர்கான் தனது டுவிட்டர் பதிவில் ‘கிழக்கு லண்டனில் உள்ள Leyton இல் துப்பாக்கி முனையில் எனது கடிகாரம் என்னிடமிருந்து கொள்ளையடிக்கப்பட்டது. நானும் மனைவி ப்பர்யலும் வீதியில் சென்று கொண்டிருந்த போது, திடீரென இரண்டு ஆண்கள் என் அருகே ஓடி வந்தனர்.

அதில் ஒருவன் என்னுடைய முகத்திற்கு நேராகத் துப்பாக்கியை நீட்டி நான் அணிந்திருந்த கை கடிகாரத்தை கொடுக்குமாறு கேட்டான்’ என்று குறிப்பிட்டுள்ளார்.

அமீர்கான் கடந்த 2004ஆம் ஆண்டு இடம்பெற்ற ஒலிம்பிக்கில், குத்துச்சண்டைப் போட்டியில் வெள்ளி பதக்கம் வென்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஜப்பான்

## உக்ரேனுடன் கை கோர்க்கும் ஜப்பான்

உக்ரேனுக்கும் ரஷ்யாவுக்கும் இடையே இடம்பெற்றுவரும் போரானது தொடர்ந்து நீடித்து வருகின்றது.

இந்நிலையில் உக்ரேன் மீது ரஷ்யா மேற்கொண்டு வரும் இரசாயனத் தாக்குதல்களில் இருந்து பாதுகாத்துக் கொள்ள, உக்ரேனிய இராணுவத்தினருக்கு சிறப்பு பாதுகாப்பு உடைகள், முகக்கவசங்கள் மற்றும் டிரோன்களை வழங்க ஜப்பான் அரசு தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், ஜப்பான், உக்ரேனுக்கு அதிகபட்ச ஆதரவை வழங்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மார்ச் மாதமும் ஜப்பான் அரசானது, குண்டுகள் துளைக்காத உள்ளாடைகள், தலைக்கவசங்கள், வெப்ப ஆடைகள், கூடாரங்கள், சுகாதார பொருட்கள், ஜெனரேட்டர்கள் உள்ளிட்ட பல பொருட்களை உக்ரேன் இராணுவத்திற்கு வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



## லாவோஸ்

## புத்தாண்டு கொண்டாட்டத்தால் 35 பேர் உயிரிழப்பு

தென்கிழக்கு ஆசிய நாடான லாவோசில் ஒவ்வோர் ஆண்டும் ஏப்ரல் 14 ஆம் திகதியிலிருந்து 16 ஆம் திகதி வரை அந்நாட்டு மக்களால் புத்தாண்டு கொண்டாடப்பட்டு வருகின்றது.

மேலும், இப் புத்தாண்டையொட்டி அந்நாட்டில் ஒரு வாரத்துக்கு விடுமுறை அளிக்கப்படுவதாகவும் இப் புத்தாண்டுக் கொண்டாட்டங்களின் போது ஏற்பட்ட வீதி விபத்துகளில் சிக்கி 35 பேர் உயிரிழந்துள்ளனர் என அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த 11ஆம் திகதியிலிருந்து 17ஆம் திகதி வரை 312 விபத்துகள் ஏற்பட்டதாகவும், இதில் 35 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும், 552 பேர் காயமடைந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இங்கிலாந்து பிரீமியர் லீக்:

# யுனைட்டெட்டைத் தோற்கடித்த லிவர்பூல்



இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், தமது மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற மன்செஸ்டர் யுனைட்டெட்டுடனான போட்டியில் 4-0 என்ற கோல் கணக்கில் லிவர்பூல் வென்றது.

லிவர்பூல் சார்பாக, மொஹமட் சாலா இரண்டு கோல்களையும், லூயிஸ் டயஸ், சாடியோ மனே ஆகியோர் தலா ஒவ்வொரு கோலையும் பெற்றனர்.

அந்தவகையில், பிறீமியர் லீக் புள்ளிகள் பட்டியலில் 76 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் லிவர்பூல் உள்ளது. ஒரு போட்டி குறைவாக விளையாடியுள்ள நடப்புச் சம்பியன்கள் மன்செஸ்டர் சிற்றி, 74 புள்ளிகளுடன் இரண்டாமிடத்திலுள்ளதுடன், இரண்டு போட்டிகள் குறைவாக விளையாடியுள்ள செல்சி 62 புள்ளிகளுடன் மூன்றாமிடத்திலும், 57 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பரும் உள்ளன.



## கிண்ணியா வலய பாடசாலை ஆசிரியர் அணிகளுக்கிடையிலான தொடர்:

# சம்பியனான அலிகார் மகா வித்தியாலய அணி

கியாஸ் ஷாபி

கிண்ணியா வலய பாடசாலை ஆசிரியர் அணிகளுக்கிடையே- நடைபெற்ற கிரிக்கெட் தொடரில், அலிகார் மகா வித்தியாலய ஆசிரியர் அணி வெற்றி பெற்று 2022ஆம் ஆண்டுக்கான சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்த கொண்டது.

கிண்ணியா அல் அதான் மகா வித்தியா லயத்தால் நடாத்தப்பட்ட இத்தொடரில் 20 பாடசாலைகளைச் சேர்ந்த ஆசிரியர் அணிகள் கலந்து கொண்டன.

இத்தொடரின் முதலாவது அரையிறுதிப் போட்டியில், அல் அதான் மகா வித்தியாலய அணியை அலிகார் மகா வித்தியாலய அணி வென்றும், இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் அரபா மகா வித்தியாலய அணியை வென்று அல் அக்ஸா கல்லூரி அணியும் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றிருந்தன.


இதன் இறுதிப் போட்டி கிண்ணியா முனைச்சேனை மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது.

இறுதிப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய அலிகார் மகா வித்தியாலய அணி 10 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்து 136 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு, 137 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய அல் அக்ஸா கல்லூரி இறுதிவரை போராடி 10 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 129 ஓட்டங்களையே பெற்று ஏழு ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

இறுதிப் போட்டியின் நாயகனாக அலிகார் மகா வித்தியாலய அணிக்காக 44 ஓட்டங்களையும் 3 விக்கெட்டுகளையும் பெற்றுக்கொண்ட எம். ஜே. ஜெரீத் தெரிவுசெய்யப்பட்டார்.

தொடரின் நாயகனாக அல் அக்ஸா கல்லூரி அணியை சேர்ந்த முகம்மது சப்ராஸும், தொடரில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய நாயகனாக அலிகார் மகா வித்தியாலய அணியைச் சேர்ந்த எம்.எச்.எம். நசீமும் தெரிவுசெய்யப்பட்டனர்.



## கோப்பா இத்தாலியா தொடர்:

# ஏ.சி மிலனை வீழ்த்தி இறுதிப் போட்டியில் இன்டர் மிலன்

கோப்பா இத்தாலியா தொடரின் இறுதிப் போட்டிக்கு இன்டர் மிலன் தகுதிப் பெற்றுள்ளது.

சான் சிரோவில் நேற்று அதிகாலை நடைபெற்ற ஏ.சி மிலனுடனான இரண்டாவது சுற்று அரையிறுதிப் போட்டியில் 3-0 என்ற கோல் கணக்கில் வென்றமையைத் தொடர்ந்து, 3-0 என்ற மொத்த கோல் கணக்கிலேயே இறுதிப் போட்டிக்கு இன்டர் மிலன் தகுதி பெற்றுள்ளது.

இன்டர் மிலன் சார்பாக, லொட்டரோ மார்ட்டின்ஸ் இரண்டு கோல்களையும், றொபின் கொஸென்ஸ் ஒரு கோலையும் பெற்றனர்.

## ஐ.பி.எல்:

# லக்னோவை வென்ற பெங்களூர்

இந்தியன் பிறீமியர் லீக்கில், மும்பையில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற லக்னோ சுப்பர் ஜையன்ட்ஸுடனான போட்டியில் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் வென்றது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற லக்னோவின் அணித்தலைவர் லோகேஷ் ராகுல், தமதணி முதலில் களத்தடுப்பிலீடுபடும் என அறிவித்தார்.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய பெங்களூர், அணித்தலைவர் பப் டு பிளெஸியின் 96 (64), ஷபாஸ் 26 (22), மக்ஸ்வெல்லின் 23 (11), கார்த்திக்கின் ஆட்டமிழக்காத 13 (08) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 181 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், ஜேஸன் ஹோல்டர் 4-0-25-2, க்ருனால் பாண்டியா 4-0-29-1 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

பதிலுக்கு, 182 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய லக்னோ, ஜொஷ் (4), பட்டேல் (2), சிராஜ், மக்ஸ்வெல்லிடம் குறிப்பிட்ட இடைவெளிகளில் விக்கெட்டுகளை இழந்து 20 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 163 ஓட்டங்களையே பெற்று 18 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. துடுப்பாட்டத்தில், பாண்டியா 42 (28), ராகுல் 30 (24), மார்க்கஸ் ஸ்டொய்னிஸ் 24 (15), ஜேஸன் 16 (09) ஓட்டங்களைப் பெற்றனர். ஹேசில்வூட் 4-0-25-4, மக்ஸ்வெல் 2-0-11-1, ஷபாஸ் அஹ்மட் 4-0-25-0, சிராஜ் 4-0-31-1 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

இப்போட்டியின் நாயகனாக டு பிளெஸி தெரிவானார்.

இந்நிலையில், இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் நடப்புச் சம்பியன்களான சென்னை சுப்பர் கிங்ஸை மும்பை இந்தியன்ஸ் எதிர்கொள்ளவுள்ளது.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டால் வியாழக்கிழமை, 21 ஏப்ரல் 2022, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.